விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 09 வெள்ளிக்கிழமை (22.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 093

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

### இந்தியா ஆதரவு, பாகிஸ்தான் எதிர்ப்பு

# ஜெனிவா தீர்மானம் நிறைவேறியது

## ஆதரவாக - 25 நாடுகள்
## எதிராக - 13 நாடுகள்

(ஜெனிவா)

**ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானத்திற்கு ஆதரவாக 25 நாடுகளும் எதிராக 13 நாடுகளும் வாக்களித்துள்ளன. 8 நாடுகள் நடுநிலை வகித்துள்ளன. இந்தியா ஆதரவாகவும் பாகிஸ்தான் எதிராகவும் வாக்களித்தன.**

இந்தியா உட்பட 25 நாடுகளின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் ஆணைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவை கூட்டத்தில் இலங்கை மனிதவுரிமை மீறல்களுக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்தது.

தொடக்கத்தில் இந்தத் தீர்மானத்தில் சர்வதேச விசாரணை கூறப்பட்டிருந்தது. ஆனால் பல சுற்று வாதங்களுக்குப் பின்னர் மிகவும் மென்மையான போக்குடன் கூடிய தீர்மானத்தை அமெரிக்கா நேற்று தாக்கல் செய்தது.

இத்தீர்மானத்தின் மீது முதலில் பேசிய பாகிஸ்தான் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. அமெரிக்காவின் தீர்மானத்தில் சில அம்சங்களை நீக்கவும் வலியுறுத்தியது. அத்துடன் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிப்போம் என்று தெளிவான நிலைப்பாட்டையும் அறிவித்தது.

பின்னர் பேசிய இந்தியப் பிரதிநிதி இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் உரிமை வழங்க 13ஆவது அரசியல் சட்டதிருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

உலக நாடுகள் ஏற்கக் கூடிய நம்பக (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்றத்தின் விசாரணைகள் போதாது

### பிரதி ஆணையாளர் தெரிவிப்பு

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரிக்க இராணுவ நீதிமன்றம் போதாது. பெருமளவானோர் கொல்லப்பட்ட விடயம் மற்றும் பாதிப்புக்கள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம் என்பதே மனித உரிமைகள் பேரவையின் கருத்தாக உள்ளது என ஐ.நா. மனித உரிமை பிரதி ஆணையாளர் கியுங் வஹா காங் அம்மையார் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நாடுகளின் மீதான கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றிய போதே கியுங் வஹா காங் அம்மையார் வலியுறுத்தினார்.

இலங்கை இன்னமும் எவ்வளவோ விடயங்களை செய்து முடித்து மனித உரிமைகள் தொடர்பில் தனக்கு இருக்கும் அக்கறையை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசு நேர்மையாகச் செயற்பட மறுக்கிறது.

அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரிக்க இராணுவ நீதிமன்றம் போதாது. பெருமளவானோர் கொல்லப்பட்ட விடயம் மற்றும் பாதிப்புக்கள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம் என்பதே மனித உரிமைகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆதரவாகவும் எதிராகவும் வாக்களித்த நாடுகள்

(ஜெனிவா)

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா.மனித உரிமை கவுன்சில் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் குறித்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பில் தீர்மானத்திற்கு ஆதரவாக 25 வாக்குகளும், தீர்மானத்திற்கு எதிராக 13 வாக்குகளும் பதிவாகியுள்ளது. வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் ஜப்பான் உள்ளிட்ட 8 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன. 25 வாக்குகள் பெற்று அமெரிக்க தீர்மாணம் நிறைவேறியது.

அமெரிக்காவின் தீர்மானத்திற்கு ஆதரவாக, கொரியா, மேல்டோவா குடியரசு, ருமேனியா, சியாரா லியோன், சுவிட்சர்லாந்து, எஸ்டோனியா, செக்குடியரசு, லிபியா, ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, பெரு, போலாந்து, இந்தியா, அமெரிக்கா, ஆர்ஜென்ரீனா, அவுஸ்திரேலியா, மொன்டி நீக்ரோ, பெனின், பிரேசில், சிலி, கோஸ்டரிகா, குவாத்தமாலா, ஸ்பெயின், ஐவரிகோஸ்ட் ஆகிய நாடுகளும்,

தீர்மானத்திற்கு எதிராக, பாகிஸ்தான், இந்தோனேஷியா, ஈக்குவடோர், கட்டார், கொங்கோ, மாலைதீவுகள், (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை யுத்தம் தொடர்பில் இந்தியாவுக்கு எதிராக வழக்கு

(டில்லி)

இலங்கை யுத்தம் தொடர்பில் இந்திய உச்ச நீதிமன்றில் மலேஷிய சட்டத்தரணியொருவர் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கை யுத்தத்தின் போது பொது மக்கள் கொல்லப்பட்டதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த உயிரிழப்புக்களுக்கு இந்தியா உதவிகளை வழங்கியதாகவும், இது தொடர்பில் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்த வேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது. பொதுமக்கள்நல மனுவொன்றே இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட மலேசிய சட்டத்தரணி ஏ.கணேசலிங்கத்தின் சார்பில் மஹாரியா என் கோஎன்ற சட்டத்தரணிகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் தீர்மானத்திலுள்ள அனைத்து விடயங்களும் தவறானவை



### அமைச்சர் சமரசிங்க விளக்கம்

(ஜெனிவா)

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தில் உள்ள அனைத்து விடயங்களும் தவறானவை என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் பல விடயங்களில் முன்னேற்றம் ஏற்படுவதற்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம் என்பதுதான் இங்கு முக்கியமானது.

அதைத்தான் நாங்கள் இங்கு கூறி வருகின்றோம். அவ்வப்போது முன்னேற் (02ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரமான விசாரணையை ஜெனிவாவில் கோரியது இந்தியா

(ஜெனீவா)

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை சுதந்திரமான, உலக நாடுகள்ஏற்கக்கூடியவிசாரணையை நடந்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஆனால் அமெரிக்காவின் தீர்மானத்தில் எந்த ஒரு திருத்தத்தையும் இந்தியா வலியுறுத்தவில்லை.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின்மனிதஉரிமைகள்ஆணையக் கூட்டத்தில் அமெரிக்கா, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைத் தாக்கல் செய்தது.

இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது பேசிய இந்தியப் பிரதிநிதி திலீப் சின்ஹா,

இலங்கையின் அனைத்து குடிமக்களும் முழுமையான மனித உரிமைகளை பெறுவதற்கும் உண்மையான தேசிய நல்லிணக்கத்தின் மூலமாக அரசியல் தீர்வுக்குமான ஒரு சாஎரத்தை இலங்கையின் எல்.எல்.ஆர்.சி. குழுவின் பரிந்துரைகள் உருவாக்கியிருக்கிறது.

2009-ம் ஆண்டு இந்த ஐநா மனித (19ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.பிரேரணையிலிருந்த தீர்மானங்கள் சில நீக்கம்

(ஜெனிவா)

அமெரிக்கா முதலில் கொண்டு வந்த வரைபு பிரேரணையில் இருந்து சில வசனங்கள் நீக்கப்பட்டுள்ளன.

அந்தத் தீர்மானத்தில், வெளியிலிருந்துவரும் கண்காணிப்பாளர்கள் மற்றும் வல்லுநர்களுக்கு எந்தவகையான தங்கு தடைகள் அற்ற அனுமதி வழங்கப்படவேண்டும் எனும் வாக்கிய அமைப்பு முற்றிலும் நீக்கப்படுகின்றது. அதற்குப் பதிலாக வெளியக விசாரணை என்பது உள்ளக விசாரணை என மாற்றப்பட்டிருக்கிறது.

இது போன்ற பொருத்தமான சர்வதேச விசாரணை என்னும் வாக்கியம் முழுமையாக நீக்கப்பட்டிருக்கிறது. இலங்கை அரசை வலியுறுத்துகின்றோம் எனும் சொல் ஊக்கப்படுத்துகிறோம்என அத்தீர்மானத்தில் மாற்றப்பட்டிருக்கிறது.

தேர்தல்கள் நடத்தப்பட்டது, அடிக்கட்டுமானங்களை நிர்மாணித்திருப்பது இடம் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சர்வதேச சமூகத்துடன் முரண்படாது விசாரணை மூலம் தீர்வு காண வேண்டும்

## அரசுக்கு கூட்டமைப்பு ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச விசாரணை ஒன்றே சிறந்த தீர்வாக இருக்கும். இலங்கை அரசு முரண்டுபிடிக்காமல் சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட வேண்டும். இதுவே இலங்கையின் எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது,

இன்று இலங்கைக்கும், இந்தியாவிற்குமிடையே பாரிய பிரச்சினைகள் தொடர்ந்து நிலவி வருகின்றன. இலங்கைக்கு எதிராக தமிழ்நாட்டில் எழுச்சிகொண்ட போராட்டங்கள், முழுஇந்தியாவிலுமே பரவி வரும் அபாய நிலை காணப்படுகிறது. மேலும் மாணவர் போராட்டங்களும் நாளுக்கு நாள் எழுச்சி பெற்று வருகின்றன.

இந்தப் போராட்டங்களுக்கு முக்கிய காரணம் இந்த அரசே. இவர்கள் யுத்த காலத்தின்போது தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளும், மனிதவுரிமை மீறல்களுமே இந்தியாவில் மாணவர் போராட்டங்களாக வெடித்துள்ளன.

சர்வதேச விசாரணையை வலியுறுத்தியே இந்தியாவில் கோடிக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளனர். சர்வதேச நாடுகளும் இலங்கை அரசிடம் நடுநிலையான, நீதியான விசாரணைகளை நடத்துமாறு கோரி வருகின்றன.

யுத்தத்தின்போது தவறு இழைத்தது எனக் கூறப்படும் இந்த அரசிடம் எப்படி விசாரணைகளை மேற்கொள்வது? அப்படி மேற் கொண்டாலும், நடுநிலைமையான விசாரணையை இந்த அரசு ஒரு பொழுதும் நடத்தாது. சரியான தீர்வொன்று எட்டப்பட வேண்டுமாயின், அது சர்வதேச விசாரணையொன்றின்



மூலமே முடியும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் நாம் அரசுக்கு முன்வைக்கும் கோரிக்கை என்ன வென்றால், சர்வதேசத்தைப் பகைத்துக் கொள்ளவேண்டாம். இந்த அரசு முரண்டு பிடிக்காமல் சர்வதேசத்திற்கு ஒத்து ழைப்பு வழங்கினால்மட்டுமே சிறந்ததோர் எதிர் காலத்தை இலங்கையிலும் நிலைநாட்ட முடியும் என்று தெரிவித்தார் த.தே. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன். (எ-11)

## அமெரிக்காவின் தீர்...

றங்கள் ஏற்படுகின்றபொழுது அதனைச் சர்வதேச சமூகத்திற்கு கூறி வருகின்றோம்.

கடந்த சில வருடங்களாக கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சில சவால்கள் எங்கள் முன் இருக்கின்றன. அவற்றையும் நாம் முகம்கொடுத்து அதிலும் வெற்றி பெறுவோம். அதனைச் செய்வதற்கு எங்களுக்கு கால அவகாசம் தேவை.

இந்தியா கடந்த ஆண்டு எப்படி வாக்களித்தார்களோ அதில் இந்தத் தடவையும் எந்த மாற்றமும் கிடையாது. அது அவர்களைப் பொறுத்தது.

இந்தியா ஒரு இறைமையுள்ள நாடு. அது தனது சொந்த முடிபை எடுக்கும். கடந்தாண் டில் இருந்து நாங்கள் மாறியிருக்கின்றோம்.

ஆனால் அவர்கள் மீண்டும் ஒரு தடவை அதே முடிபை எடுப்பதற்கான காரணம் என்னவென்பது குறித்து நான் ஆராய முடியாது. அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள் என்பதனை அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்படவில்லை என்று கூறுவது தவறு. அதை நாங்கள் பரவலாக நிறைவேற்றியிருக்கின்றோம்.

கண்ணிவெடி அகற்றுதல், உட்கட்டமைப்பை ஏற் படுத்தல், வாழ்விடங்களை ஏற்படுத்தல் போன்ற விடயங்கள் நடந்திருக் கின்றன.

இவை அனைத்தும் 3 வருடங்கள் 10 மாதங்களில் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏனைய விடயங்களில் முன்னேற்றம் காண எங்களுக்கு கால அவகாசம் தேவை. நாங்கள் ஒரு செயற்பாட்டுத் திட்டத்தை முன் வைத்து ள்ளோம். அந்தச் செயற்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்அதற்கான நிதி 2013-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாங்கள் ஒப்புக் கொண்ட விடயங்களை அமுல் படுத்து வோம்.

அ ை நிறைவேற்றப் படுகின்றபோது நாங்கள் முன்பு சொன்னது போல அதனைச் சர்வதேச சமூகத்திற்கு அறிவிப்போம் என் றார். (எ-1)





## காணி, வீடு விற்பனைக்கு

**வீடு — நல்லூர்**
நல்லூர் கோயில் வீதியில் ஒரு பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு விற்பனைக்கு உண்டு.(NRE/H /019)

**காணி — மல்லாகம்**
மல்லாகம் k.k.s வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (NRE / L / 018)

**காணி — நெல்லியடி**
நெல்லியடி மத்திய கல்லூரிக்கு அண்மையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (NRE/L/017)

**வீடு — சங்கானை**
சங்கானை மாரியத்தை அம்மன் கோயிலுக்கு அண்மையில் 2 3/4 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.(NRE/H/017)

தொடர்புகளுக்கு:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D. பிறவுண் வீதி. கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810


## பாராட்டி வாழ்த்துகிறோம்



**சின்னமணி கோகிலவாணி**
(கிளி / புனித திரேசா மகளிர் கல்லூரி)

அவர்கள் கடந்த 2013.02.26 அன்று கிளிநொச்சி மாவட்ட நீதிபதி மதிப்பிற்குரிய திரு. ஆ. ஜ. வகாப்தீன் அவர்கள் முன்னிலையில் மொழி பெயர்ப்பாளராகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இறைவன் அருளால் இவர் சகல துறைகளிலும் மேன்மேலும் வளர்ச்சி பெற்று சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்,
அம்மா சி.தவமணி, தங்கை சு.உதயராணி, மைத்துனர் சு.சுதர்சன் மற்றும் உறவினர், நண்பர்கள்.

D 4, தம்புகமம்,
மருதநகர்,
கிளிநொச்சி.

## இந்திய பிரஜைகள் இருவர் யாழில் கைது

இந்திய பிரஜை இருவர் நேற்று மாலை யாழ் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

பிரதிப்பொலிஸ்மா அதிபர் கருணாரட்ணவின் உத்தரவின் பேரிலேயே மேற்படி இருவரும் நேற்று மாலை 4 மணியளவில் யாழ் நகரில் அமைந்துள்ள தனியார் விடுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசா திகதி முடிபுற்ற நிலையில் அவர்கள் தொடர்ந்து தங்கியிருந்தாகக் தெரிவித்தார். அவர்கள் தொடர்ந்து தங்கியிருந்தாக தெரிவித்து மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (எ-6, 11)

## மாடு முட்டி குடும்பஸ்தர் காயம்

மாடு முட்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ். தாவடிப் பகுதியில் உள்ள தோட்ட வெளியில் நேற்று இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த செ.ஜெயராசா (வயது 58) என்ற குடும்பஸ்தரே இதில் காயமடைந்தவராவார். (எ-6)


## வாடகைக்கு

கண்டேயினர் பெட்டியுடன் கூடிய லொறி வெளி மாவட்டங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புக்கு: 0777722448 (2222)

## பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

25% கழிவு

இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


## மரண அறிவித்தல்

### சற்குணராசா கமலாம்பிகை



கரணவாயைப் பிறப்பிடமாகவும், கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணராசா கமலாம்பிகை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலம்சென்ற செல்லையா சற்குணராசாவின் அன்பு மனைவியும், பிரியதர்ஷனின் அன்புத் தாயாரும், காலம்சென்ற செ.இராசையா, செ.நாகரத்தினம், சி.பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செ.புஸ்பராணி, செ.புஸ்பராசா (சுவிஸ்), ச.சரஸ்வதி, சி.பாலசுப்பிரமணியம், காலம்சென்ற லீலாவதி ஆகியோரின் சிறிய தாயாரும், சேனாதிராஜா (கொழும்பு), சின்னராசா (கனடா), செல்வமணி (அவுஸ்திரேலியா), கமலாதேவி (கொழும்பு), ரஞ்சிதமணி (லண்டன்), காலஞ்சென்ற சதாசிவம், செல்வராஜா, சற்குணதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: பிரியதர்ஷன் (மகன்)

(சி-2760)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## குணமும் செயலும்

ஒரு இளம் துறவி அன்னையின் முன்னால் வந்து நின்றார்.

“அம்மா! நான் அமெரிக்காவுக்குப் போக வேண்டியுள்ளது. எனது பிரயாணம் நல்லபடியாக அமைய வேண்டும். அங்கே என்னுடைய பணிகள் அனைத்தும் வெற்றிகரமாக முடிய வேண்டும். அதற்கு உங்களின் ஆசீர்வாதம் வேண்டும்” என்றார்.

அந்த அன்னை இதைக் காதிலே வாங்கின மாதிரித் தெரிய வில்லை. எதுவுமே பேசாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தார். சற்று நேரம் சென்றபின் தனது பார்வையை லேசாகத் திருப் பினார்.

இதுதான் சமயம் எனப் பார்த்து, அந்த இளம் துறவி மறுபடி யும் தன்னுடைய வேண்டுகோளைச் சொன்னார்.

அவர் இதைக் கண்டுகொள்வதாகவே தெரியவில்லை. ஏதோ யோசனையிலேயே இருந்தார்.

பின்னர் அந்தத் துறவியிடம் வேறு ஏதோ பேச ஆரம்பித்தார்.

“மகனே! நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்” என்றார்.

‘‘என்ன உதவி சொல்லுங்கள்... உடனே செய்கிறேன்’’ என்றார்.

‘‘வேறு ஒன்றுமில்லை... இதோ அருகில் உள்ள அந்த அறைக்குப் போய் கதவிற்குப் பின்னால் இருக்கும் கத்தியை எடுத்துக்கொண்டு வந்து கொடு” அவ்வளவுதான் என் றார் அந்த அன்னை.

இளந்துறவி யோசித்தார் ‘‘இது என்ன? நாம் கேட்பது ஆசீர்வாதம்... அவர் கேட்பது கத்தி... ஒன்றுக்கொன்று தொடர் பில்லாமல் இருக்கிறது. ஒரே குழப்பமாக இந்தத் துறவிக்கு இருந்தது.

இருந்தாலும்... அதைப் பற்றி எதுவுமே அவர் யோசிக்காமல் நேராகப் போய்... அந்தக் கத்தியை எடுத்துக்கொண்டு வந்தார்.

அந்த அம்மாவிடம் கொடுத்தார். அம்மாவும் அதைக் கவன மாக வாங்கினார். அதன்பின் சொன்னார்;

“மகளே!... உனது பயணம் நல்லபடியாக அமையட்டும். போய் வா! என்று கையை உயர்த்தி அந்த இளம் துறவியின் தலையிலே வைத்து ஆசீர் வழங்கினார்.

“அம்மா!... இந்தக் கத்திக்கும் உனது ஆசீர்வாதத்திற்கும் என்ன தொடர்பு என்று எனக்கு விளங்கவில்லை” என்றார் துறவி. இப்போது அந்த அன்னை விளக்கம் கொடுக்க ஆரம் பித்தார்.

“மகனே...! நீ இந்தக் கத்தியை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தாய்... அப்படி கொடுக்கும் போது... கத்தியின் கூரான பகுதியை உன் பக்கம் இருக்கிற மாதிரி பிடித்துக் கொண்டு, கைப்பிடி இருக்கிற ஆபத்தில்லாத பகுதியை என் பக்கம் நீட்டிக் கொடுத்தாய்.

இதிலேயிருந்து “எந்தவொரு செயலைச் செய்யும் போதும் அதனாலே ஏற்படக்கூடிய தீமைகளை நீ ஏற்றுக் கொண்டு மற்றவர்களுக்கு நன்மையே செய்வாய்” என்பதைப் புரிந்து கொண்டேன். இந்த உயர்ந்த குணம் எல்லோருக்கும் வராது என்று அந்த அம்மா தலைகுளிர மெச்சினார்.

“அம்மா! இவற்றையெல்லாம் நினைத்துக் கொண்டு இச் செயலைச் செய்யவில்லை. கூரியமுனை உங்களைக் குத்தக் கூடாது என்பதற்காகவே கைப்பிடியை உங்களின் பக்கம் நீட்டி னேன்” என்றார்.

“உன்னை அறியாமலே மற்றவர்களுக்கு நன்மை செய்யும் பண்பு உன்னிடம் உள்ளது” என்றார்.

அந்தக் குணம் எப்போதும் உன்னை அடுத்தவர்களுக்குத் தீங்கு விளைவிக்க செய்யாமல் காப்பாற்றும்– மறுபடியும் ஆசீர் வாதம் செய்தார் அந்த அம்மா.

இதேமாதிரி ஒவ்வொருவரும் செய்யும் செயல் அவர்களின் குணத்தைக் காட்டிக் கொடுக்கும்.

கத்தியை எடுத்துக் கொண்டு வந்து தரும்படியாகக் கேட் டால்... உடனே நாம் முகத்திற்கு நேராக குத்துகிற மாதிரி கொண்டு வந்து நீட்டுவது சர்வ சாதாரண விடயமாகி விட்டது.

புத்தியைப் பயன்படுத்தத் தெரியாதவர்களுக்குக் கத்தியை யும் பயன்படுத்தத் தெரியாது... அதனால்தான் வன்முறைகளும் கிளர்ந்தெழ ஆரம்பித்தது. பின்னர் அக்கத்தி அவனுக்கே ஜெம னாகிறது.

*தென்கச்சி கோ:சுவாமிநாதன்*

# 12 துறைகளூடாக யாழ். மாவட்டத்தில் முதலீடுகளை மேற்கொள்ள முடியும்

## கனேடிய தூதுவரிடம் அரச அதிபர் சுட்டிக்காட்டு

யாழ். மாவட்டத்தில் 12 துறைகளின் ஊடாக முதலீடுகளை செய்ய முடியும். அதற்கான மூலவளம் இங்குள்ளது என கனேடிய நாட்டுப் பிரதிநிதிகளி டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் சுட்டிக் காட்டியு ள்ளார்.

கனேடிய நாட்டின் செனற்றர் ஹூக் டி.செகால் மற்றும் இலங்கைக்கான கனேடிய நாட்டின் உயர்ஸ்தானிகர் திருமதி ஷெலி விஷல் உள்ளிட்ட குழுவி னர் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் அரசாங்க அதிப ரைச் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கனேடியக் குழுவினருடான சந்திப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

யாழ். மாவட்டத்தில் முதலீடுகளைச் செய்வதற்கு வெளிநாட்டவர்களும் ஏனையவர்களும் முன்வர வேண்டும்.

முதலீடுகளைச் செய்வதற்கான மூலவளம் இங்கு நிறைவாகவுள்ளது. உதாரணமாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மணற்காடு பகுதியில் கண்ணாடி உற்ப த்தி தொழிற்சாலையை நிறுவக் கூடிய மூலவளம் அங்குள்ளது.

இதுதவிர சுற்றுலாத்துறையில் முதலீடு செய்யக்கூடிய மூலவளம் காரை நகரிலும் மருதங்கேணி உதவி அரசா ங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மணற் காடு, நெடுந்தீவு பகுதியிலும் உள்ளது. சாவகச்சேரி அல்லாரைப் பகுதியில் தும்புத் தொழிற்சாலையும் சண்டிலிப் பாய் பிரதேசசெயலர்பிரிவிலும்வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அல் லைப்பிட்டியில் அலுமினியம் உற்ப த்தி தொழிற்சாலைகளும் அமைப்பதற் கான மூலவளம் உள்ளது.

இவ்வாறு ஊர்காவற்றுறை எழுவை தீவுப் பகுதியில் பனை சார் உற்பத்தி தொழிற்சாலையும் வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மண்டைதீ வில் மீன் உள்ளிட்ட கடலுணவு பதனி டும் தொழிற்சாலை என்பன அமைப் பதற்கான மூலவளம் உள்ளமை இனம் காணப்பட்டுள்ளது. இவ்வாறு முதலீடு களைச் செய்யக் கூடிய வகையில் மூலவளம் இருந்தும் உரிய முறை யில் அவை பயன்படுத்தப்படவில்லை.

வெளிநாட்டவர்கள் இந்த முதலீட் டுத் துறையில் அதிக அக்கறை காட்டு மிடத்தில் இங்குள்ள மூலவளங்களும் பயன்படுத்தப்படும் தொழில் வாய்ப்புக் களும் அதிகரிக்கப்படும். அத்தோடு உற்பத்திகளும் அதிகரிக்கும் எனத் தான் தெரிவித்ததாக அரசாங்க அதிபர் கூறினார்.

இதற்கு கனேடிய குழுவினர் எந்தப் பதிலும் அளிக்கவில்லை என்ற போதி லும் இவ்விடயம் குறித்து உன்னிப் பாக அவதானித்துக் கொண்டிருந்த னர் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித் தார்.

அத்தோடு யாழ். மாவட் டத்தின் தற்போதைய நில வரம் குறித்தும் கனேடியக் குழுவினர் தன்னுடனான சந் திப்பின் போது கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவித் தார். இதுதவிர யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில்மேற்கொள் ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை விளக்கப்படங் களைக் காட்சிப்படுத்தி விரி வாக எடுத்துக் கூறியதாக வும் தெரிவித்தார்.

அத்தோடு யுத்தத்திற்குப் பின்னர் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப் பட்டு வருகின்றனர். அவர்களு க்கு பகிர்ந்தளிக்க வீடுகள் அதிகம் தேவைப்படுகின்றது எனவும்30வீதம்வீட்டுத்தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதும் இன்னும் அதிகள வான மக்களுக்கு வீடுகள் தேவைப்படுகிறது எனவும் தெரிவித்தேன். அதுமட்டும ன்றி இந்திய அரசாங்கமும் ஏனைய அரச சார்பற்ற நிறுவ னங்களும் மக்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளன. இருப் னும் வீடுகள் அதிகம் தேவைப்படு கிறது. அதற்கான உதவிகளை கனேடிய அரசாங்கம் செய்ய முன் வரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தேன். இதற்கு பதிலளித்த கனேடிய செனற்றர் யாழ். மாவட்டத்தி லுள்ள மக்களுக்கான வீடுக ளைக் கட்டிக் கொடுப்பது தொடர்பில் சாதகமான முறை யில் கோரிக்கை பூரிசீலிக்க ப்படும் எனப் பதிலளித்தார்.

அத்தோடு விவசாயம், வாழ்வாதாரம் போன்ற பல விடயங்கள் தொடர்பிலும் எடுத்துக் கூறியதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த கனேடிய நாட்டுப் பிரதிநிதிகள் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை உள்ளிட்ட பல தரப்பட்ட வர்களுடனும் சந்திப்புக்களை ஏற்படு த்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக் கது. (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 | 150 |
| தக்காளி | 70 | 60 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 40 | 40 | 60 | 60 |
| கரட் | 110 | 120 | 120 | 120 |
| பூசணி | 80 | 40 | 60 | 60 |
| புடோல் | 70 | .70 | 70 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 80 | 60-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 60 | 100 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 120 | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 130 | 90 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | -- |
| போஞ்சி | 120 | 100 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80-100 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 50 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 120 | 60 | 120 | 90 |
| வெங்காயப்பூ | 160 | [illegible] | 160 | 160 |

# இராசி பலன்

*22.03.2013*
*(பங்குனி 09, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு*
*தசமி பிற்பகல் 3.02 மணிவரை*
*பூசம் முழுவதும்*
*இராகுகாலம் 10.46-12.16 மணிவரை*
*சுபநேரம் 6.16-7.46 மணிவரை*

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படையும் நாள் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும், ஆனைமுகனை வழிபட்டு ஆனந்தம் காண வேண் டிய நாள், சுபசெலவுகள் கூடும்.

**இடபம்** தேக நலனில் கொஞ்சம் அக்கறை கொள்ளவேண்டிய நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங் கும், உடன்பிறப்புக்கள் மூலம் உள் ளம் மகிழும் செய்தியொன்று வந்து சேரும்.

**மிதுனம்** கரைத்த சேமிப்பை ஈடாக்கும் எண்ணம் உருவாகும், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், கணபதி வழிபாடு காரிய வெற்றிதரும்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விநாய கரை வழிபட வேண்டிய நாள், வெளியூர் பயணமொன்றில் கையி ருப்பு கரையலாம், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள் வீர்கள்.

**சிங்கம்** மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள், உறவினரைக் காண பயண மொன்றை மேற்கொள்ளும் சூழ் நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி** யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவ மொன்று இடம்பெறலாம், உறவி னர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவா கும், பொருளாதார நிலை உயரும்.

**துலாம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள், குடும்பத்தாரின் ஒத்து ழைப்பால் தொழில் முன்னேற்றம் ஏற்படலாம், பிரியமான சிலரின் சந்திப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**விருச்சிகம்** ஆரோக்கியம் சீராக மருத்துவத்தை நாடுவீர்கள், ஆன்றோர் சந்திப்பு ண்டு, அச்சமான நிலையுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**தனுசு** எடுத்த காரியங்களில் சில தாமத ங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை, நீங்கள் நேசித்த ஒருவருடன் யோசி த்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**மகரம்** புதிய பொருட்சேர்க்கையுண்டு, செல்வாக்கான நாள், அபூர்வ சந்திப்புண்டு, செய்தொழில் மேன் மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக் கையானை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படு வீர்கள், எடுத்த காரியங்கள் கை கூடும், போசன நன்மையுண்டு.

**மீனம்** தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவ முண்டு, சில காரிய இடையூறுகள் ஏற்படலாம், பிள்ளைகளின் கல்வி நலன்கருதி முக்கிய முடிவெடுப் பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு


(கரவெட்டி)

வல்வெட்டித்துறை அம்மன் ஆலய பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-துவிச்சக்கர வண்டி விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வல்வெட்டித்துறை அம்மன் ஆலயப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-துவிச்சக்கர வண்டி விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த அதே இடத்தை சேர்ந்த குஞ்சர் விநாயகர் பாலச்சந்திரன் (வயது 65) என்ற வயோதிபர் காலில் பலத்த காயமடைந்தார்.

இந்த விபத்து தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் இறுதித் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வல்வெட்டித்துறை பொலிஸார் இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தனர். இதில் பாதிக்கப்பட்ட வயோதிபருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் போக்குவரத்து விதிகளை மீறியமைக்காக 16 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறும் எதிரிக்கு நீதவான் உத்தரவிட்டார். (அ-5-24)



# யாழ்., கிளி. மாவட்டங்களில் 8 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்கள் குடியேற தயார்

## யாழ்.மாநகர சபை உறுப்பினர் சுபியான் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 8 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்கள் மீள் குடியேறுவதற்கு தயாராகவுள்ளனர் என யாழ்.மாநகர சபையின் முஸ்லிம் உறுப்பினரும் முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதியுமான எல்.ஏ.சுபியான் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

8 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்கள் மீள் குடியேற்றத்திற்காக தயாராக இருக்கிறார்கள்.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் இதுவரை 2 ஆயிரத்து 834 குடும்பங்கள் மீள் குடியேற்றத்துக்காக பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக பிரதேச செயலக புள்ளி விபரத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதில் யாழ்ப்பாணத்தில் 2 ஆயிரம் குடும்பங்கள் பதிவு செய்துள்ளதாகவும் ஆயிரத்து 995 குடும்பங்கள் தற்போது யாழில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் யாழில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களுக்கு எதிர்பார்த்த வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலையிலேயே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர் எனவும் சுட்டிக் காட்டினார்.

யாழில் மீள்குடியேற்றப்பட்ட முஸ்லிம் குடும்பங்களும் இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை 2010 ஆம் ஆண்டு விடுக்கப்பட்டது. இதற்கமைய யாழ்.மாவட்டத்தில் மூன்றாம் கட்ட இந்திய வீட்டுத் திட்ட பணியில் நான்கு முஸ்லிம் கிராமங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது முஸ்லிம் மக்கள் மத்தியில் காணி பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

முஸ்லிம்களுக்கு சொந்தமான பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்று மண்களை கொண்டு வந்து கொட்டியுள்ளதால் பொதுமக்களின் காணிகள் அடையாளம் காண முடியாத நிலையில் உள்ளதாகவும் இந்த காணியில் உள்ள மண்ணை அகற்றினால் காணி உரிமம் உள்ள முஸ்லிம் மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் பெறும் வசதி ஏற்படும் எனவும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இது தொடர்பில் கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

அதில் குறித்த பறைச்சேரி வெளிப்பகுதியில் ஹலோரஸ் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினால் கொட்டப்பட்ட மண் அகற்றப்பட்டு அந்தக் காணிகளுக்கான எல்லைகளை உரிய முறையில் இடுவதற்கான நடவடிக்கைகள் எடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவித்த அவர், யாழில் மீள்குடியேறும் மக்களிடம் இடைத்தரகர்கள் பல மோசடி நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் இவர்கள் தொடர்பில் மக்கள் அவதானத்துடனும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதுதவிர முஸ்லிம் மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படாததன் காரணமாக இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்கள் இங்கு மீள்குடியேறுவதற்கு விரும்பவில்லை எனவும் இதனால் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தடைப்படுவதாகவும் கல்வியில் அரசியல் தலையீடு தவிர்க்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார். (அ-6)

# வி.கழகங்களுக்கான விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா/இந்துக் கல்லூரி மைதானத்தில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.எம். ராஜா ரணசிங்க, கௌரவ விருந்தினர்களாக யா/இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா, யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு அதிகாரி எம்.ஆர்.மோகனதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2)




# வழக்கை வாபஸ் பெற பரு.சபை தீர்மானித்தது

(கரவெட்டி)

வியாபாரி மூலை தலவத்தை காளியம்மன் ஆலயத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் இவ்வழக்கை மீளப் பெறுவதாக பருத்தித்துறை பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

மேற்படி தலவத்தை காளியம்மன் ஆலயத்திற்கு எதிரான வழக்கு தொடர்பில் பிரதேச சபை தவிசாளர் பூபாலசிங்கம் சஞ்சீவன் பிரதேச சபையின் அங்கீகாரம் பெறாமல் தன்னிச்சையாக செயற்பட்டமைக்கு சபையில் கடும் எதிர்ப்பு தெரிவித்தமையால் இவ்வழக்கை மீளப் பெறுவதாக சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் நிழல் குடை பிரதேச சபையின் வீதிக்கு குறுக்கே உள்ளமையால் அவ்வீதியில் பயணிக்கும் மக்களிற்கு இடையூறு விளைவிப்பதாகவே தவிசாளரால் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இதனால் எதிரணியை சேர்ந்த ஐ.சிறீரங்கேஸ்வரன் இவ்வழக்கு சபையில் அங்கீகாரம் பெறாமல் நீதிமன்றில் தொடரப்பட்டதாக தனது தரப்பிலிருந்து எதிர்ப்பை வெளியிட்டுள்ளமையால் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக இருந்த வழக்கை மீளப்பெறுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-5-24)

# மருந்தாக்கவியல் பட்டநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)


இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மருந்தாக்கவியல் பட்டமாணி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி வரை பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அவர் அறிவித்துள்ளார்.

அத்துடன் விண்ணப்பதாரிகள் தகைமைகளாக ஆகக்குறைந்தது இரு வருட தொழில் அனுபவம், இலங்கை மருத்துவ சங்கத்தில் மருந்தாக்கவியலாளராக அங்கத்துவம் ஆகியவற்றுடன் இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்டு க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இப்பட்டமாணிக்குரிய சகல கல்விச் செயற்பாடுகளும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் கொழும்பு பிராந்திய நிலையத்தில் மாத்திரமே நடைபெறுமென யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ-2)





வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வி அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று முன்தினம் வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது வடமாகாண கல்வி அமைச்சின் பிரதி செயலாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா, வடமாகாணத்திலுள்ள கல்விப் பணிப்பாளர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துவில் உலக காசநோய் தினம்

(யாழ்ப்பாணம்)

உலக காச நோய் தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை கொக்குவில் இந்துக்கல்லூரியில் இக்கல்லூரி அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவவிருந்தினர்களாக யாழ்ப்பாணம் மருத்துவ பீட சமுதாய மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி இ. சுரேந்திரகுமார், யாழ்ப்பாண பிராந்திய தொற்று நோயியலாளர் வைத்திய கலாநிதி சி.சிவகணேஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி த.திரிபுரசுந்தரி, யாழ். மாவட்ட லயன்ஸ் கழக பிரதம இணைப்பாளர் வைத்திய கலாநிதி வி.தியாகராஜா, ஈ.எஸ்.பி நாகரெட்ணம் அன்கோ உரிமையாளர் லயன் இ.ச.பே. நாகரட்ணம், வி.கே. ராஜரடணம், நிறுவன உரிமையாளர் லயன் தம்பிமுத்து ஸ்ரீ விமலேஸ்வரன், வடமாகாண இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது **ஈழை விழி வழி** கண்காட்சி திறப்பு, சுழிபுரம் காவேரி கலா மன்றம் நடத்தும் **காசமற்ற தேசம் நோக்கி!** எனும் நாடகம், கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவிகளின் காச நோய் விழிப்பு நடனம், காசநோய் விழிப்புப் பாடல்கள் கொண்ட ஒலி இறுவெட்டு வெளியீடு, காசநோய் நூல் வெளியீடு என்பன இடம்பெறவுள்ளன. (அ-2)

# விலங்கு விசர் நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக் குட்பட்ட குருநகர் I பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப் படவுள்ளதாக யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை குருநகர் CDMH இற்கு முன்பாக வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# உ/த பரீட்சைக்கு விண்ணப்பித்தல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து இரண்டாம் தடவையாக க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களை எதிர்வலும் 27 ஆம் திகதி புதன்கிழமை வருகை தந்து விண்ணப்பப் பத்திரத்தில் ஒப்பமிடுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (அ-2)


அறிவுபூர்வமான முதலீட்டுத் தீர்மானத்திற்கு நீங்கள் தயாரா?




(சி/2749)

வாருங்கள் முதலீடு பற்றிய அறிவை வளர்ப்போம்
CSE முதலீட்டாளர் தினம் 2013
யாழ்ப்பாணம் | 2013 மார்ச் 23
மு.ப 10.00 முதல் பி.ப 3.00
வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு www.cse.lk யைப் பாருங்கள் அல்லது அழையுங்கள் 021-2221455/0777-822014

CSE COLOMBO STOCK EXCHANGE


# விபத்துக்களை தவிர்க்க விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்குடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தினால் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் காரணமாக உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் சுன்னாகம் பொலிஸார் இந்த விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி பண்டார தலைமையில் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பகுதியில் பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் இந்தத் துண்டுப் பிரசுரங்களைப் பொலிஸார் விநியோகித்து வருகின்றனர்.

குறித்த துண்டுப் பிரசுரத்தில் வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்கான பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இரவு நேரங்களில் துவிச்சக்கரவண்டிகளில் டைனமோ இன்றி பயணித்தல், கறுப்பு உடைகள் அணிந்தவாறு பயணிப்பது உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் பொதுமக்கள் வீதி விபத்துக்கள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் எனவும் பல விடயங்கள் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ-6)

# திருவள்ளுவர் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தமிழ் சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறும். இதன்போது பன்முக நோக்கில் வள்ளுவர் எனும் தொனிப் பொருளில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர் மா. சின்னத்தம்பி கருத்தரங்கம் ஒன்றை நடத்தவுள்ளார். அத்துடன் வள்ளுவர் பெரிதும் வலியுறுத்த முனைவது இல்லறச் சிறப்பே, துறவற மேன்மையே, ஊழின் வலியே என்னும் தலைப்பினை வைத்து முக்கோணப் பட்டி மண்டபம் இடம் பெறவுள்ளது. இதற்கு யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்தின் செயலர் இரா. செல்வவடிவேல் நடுவராக கலந்து கொள்ளவுள்ளார். (அ-2)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 4<br>உயரம்: 5'9"<br>கி.பா: 24, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L, Manager தனியார் துறை<br>தொ.இ: B -001 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>உயரம்: 5'5"<br>கி.பா: 23.75, 8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BFA, Music Teacher<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: G -100 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 28.75, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L BCA, Computer Application Assistant<br>தொ.இ: B -005 | பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 40<br>தகைமை/ தொழில்: BA ஆசிரியர்<br>தொ.இ: G-101 |
| பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா:43.25, 8 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: MA (பட்டதாரி பயிலுநர்)<br>தொ.இ: B -006 | பிறப்பு: 1979 றோ.க (வேளாளர்)<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>உயரம்: 5'4"<br>கி.பா: 24.5<br>தகைமை/ தொழில்: A/L<br>எ.பா:சாதகம் பார்ப்பதில்லை<br>தொ.இ: G -102 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம் 1<br>உயரம்: 5'7"<br>கி.பா: 144, 7 இல் சூரி, செவ்<br>தகைமை/தொழில்: MBA (வியாபார முகாமையாளர்)<br>தொ.இ: B -007 | பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுஷம் 4<br>உயரம்: 5'<br>தகைமை/ தொழில்: விரிவுரையாளர்<br>தொ.இ: G -103 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்த பிக்கு மீதான தாக்குதலை கண்டித்து மதவாதிகள் குரல் எழுப்புவது வேடிக்கை

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒரு சில இன வாத வன்முறை சம்பவங்களை எதிர்த்து இந்த நாட்டில் இன்று இன மத வாதம் பேசி திரியும் கும்பல்கள் குரல் எழுப்புவது பெரும் வேடிக்கை. இவர்கள் ஊர்வலமாக இந்திய தூதரகத்திற்கு சென்று மகஜர் கொடுப்பது அதை விட பெரும் வேடிக்கையாகவுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழக தாக்குதல் சம்பவங்களை கேள்வியுற்றவுடன் முதன் முதலாக கண்டனம் தெரிவித்து, நமது கண்டன செய்திகளை தமிழ், சிங்கள, ஆங்கில மொழி ஊடகங்களில் அறிவித்த தமிழ் கட்சியின் தலைவன் நான்.

ஏனென்றால் நாங்கள் இனவாதிகள் இல்லை. தமிழ், சிங்கள, முஸ்லிம் என்று எல்லா இனவாதங்களையும் நாம் கண்டிக்கிறோம். ஆகவே எங்களுக்கு தமிழகத்தில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களை கண்டிக்க உரிமை இருக்கிறது. ஆனால் இந்நாட்டில் இன்று தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களை குறிவைத்து தாக்குதல்கள் நடத்தும் பொதுபல சேனா, சிங்களராவய சங்கம் ஆகிய அமைப்புகளுக்கு தமிழகத்தை கண்டிக்க எவ்விதமான தார்மீக உரிமை இருக்கிறது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்றுமுன் தினம் கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய போதே அவர் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

எமது கட்சியில் எமது இந்த கூட்டு அமைப்பில் இனவாதம் பேசுவோருக்கு இடமில்லை. நான் சென்னை சம்பவம் நடந்த அன்றே மாலை தமிழக முதல்வருக்கு மின்னஞ்சல் மூலமாக நடந்த சம்பவத்தை கண்டித்தும் அது தொடர்பில் அவர் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியும் கடிதம் அனுப்பியுள்ளேன்.

ஆகவே இன்று எங்களுக்கு இந்த பௌத்த மதத்தின் பெயரில் மத, இன வாதங்களை தூண்டிவிடுவோருக்கு எதிராக பகிரங்கமாக கருத்து தெரிவிக்கும் உரிமை இருக்கிறது.

தமிழ் இந்து மக்களுக்கு எதிராக அனைத்தையும் முன்னின்று செய்து முடித்துவிட்டு இன்று முஸ்லிம் வர்த்தக நிலையங்களில் பொருட்களை வாங்காதீர்கள். முஸ்லிம் பெண்களே, நீங்கள் அபாயா அணியாதீர்கள் என்று பயமுறுத்தி இவர்கள் மதவாத பிரசாரம் செய்கிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் கொழும்பு மாவட்ட மாலபே நகரில் ஒரு கிறிஸ்தவ வீட்டுக்குள் அடாவடியாக சென்று புனித பைபிள் நூலை தரையில் வீசி எறிகிறார்கள். இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதஸ்தலங்களை தாக்குகிறார்கள்.

இவர்கள் தான் இன்று தமிழகத்தை எதிர்த்து கண்டனம் தெரிவிக்கிறார்கள். இதை நியாயசிந்தைகொண்ட எவரும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மையில் சென்னையில் வன்முறையில் ஈடுபட்ட ஒரு சிலர் தமது செயல்கள் மூலம் இவர்களை சந்தோசப்படுத்துகிறார்கள். இவர்களும் தமது இன-மதவாத செயல்கள் மூலம் அவர்களை சந்தோசப்படுத்துகிறார்கள். இந்த இரண்டு தரப்பினரும் சம்பந்திகள். ஆனால் அங்கு இனவாதம் இதுவரையில் அமைப்பு ரீதியாக இல்லை. சில தனிநபர்கள் அதை அங்கு செய்கிறார்கள். ஆனால் இங்கே இவர்கள் அமைப்பு ரீதியாக செய்கிறார்கள்.

தமிழகத்தில் புத்த பிக்குகளை தாக்கியவர்களை அங்குள்ள முஸ்லிம் அடிப்படைவாதிகள் என்பது இவர்களது புதிய கண்டுபிடிப்பு. இங்கே இருந்துகொண்டே அதை கண்டு பிடித்துவிட்டார்கள். தமிழக பொலிஸ் இவர்களுடன் தொடர்பு கொண்டு மேலும் தகவல்களை பெற வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன்.

மனித உரிமை விசாரணை கோரிக்கைகள் ஒருபுறம் இருக்க ஜனநாயக மக்கள் முன்னணியின் பெயரில் நாம் அரசிடம் இரண்டு கோரிக்கைகளை முன்வைக்கிறோம்.

முதலாவது உடனடியாக உறுதி அளித்ததை போல் வட மாகாணசபை தேர்தலை நடத்துங்கள். இரண்டாவது உடனடியாக இலங்கை ஜனாதிபதிக்கும் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கும் இடையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டறிக்கையில் சொல்லப்பட்ட 13 ஆம் திருத்தத்தை அமுல்செய்து அதை மேலும் அபிவிருத்தி செய்யுங்கள்.

மாகாண சபையையும் 13 ஆம் திருத்தமும் கற்றுக்கொண்ட ஆணைக்குழு அறிக்கையும் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வுகளைத் தரவில்லை. ஆனால் முதலில் இவற்றையாவது செய்து அரசாங்கம் தனது நேர்மையை வெளிப்படுத்த வேண்டும். அதன்பின்னர் தான் வட்ட- சதுர மேசை சர்வகட்சி பேச்சுவார்த்தைகள் நடக்கவேண்டும் என்பது எமது நிலைப்பாடு. (அ-2)

# 49 ஆவது குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

இந்து மாமன்றத்தின் யோகர்சுவாமிகள் ஞாபகார்த்த அமைப்பினரால் யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் தவத்திரு யோகர் சுவாமிகளின் 49 ஆவது குருபூசைத் தினம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இப்பாடசாலையின் யோகர் சுவாமிகள் மண்டபத்தில் நடைபெறும்.

எனவே, அனைவரையும் குருபூசைத் தினத்தில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அழைக்கப்படுகிறார்கள். (அ-2)

# இந்து சமுத்திரத்துக்குள் இலங்கை மூழ்கும்

(கொழும்பு)

அரசாங்கம் சர்வதேசத்தின் ஊடாக அதிகளவில் கடனைப் பெற்று வருவதால் இலங்கை இந்து சமுத்திரத்தில் கடனில் மூழ்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக் கொண்ட கடன் நிதியை வீணாக செலவிடப்பட்டதால் திட்டமிடப்பட்ட எந்த திட்டங்களில் இருந்து பலனை பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த கடனுதவியில் தரகு காகங்களின் பைகளுக்குள் பணம் சென்றது மாத்திரமே நடந்துள்ளது. இதனால் சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக் கொண்ட கடனை அடைப்பதற்காக அரசாங்கம் மக்கள் மீது வரிச் சுமைகளையும் அபராத தொகைகளையும் அதிகரித்துள்ளது எனவும் விக்ரமபாகு மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# கண்டாவளை பிரதேச செயலகத்தை தனி பிரதேச செயலகமாக மாற்றுக

(புளிம்பொக்கணை)

கண்டாவளை பிரதேசம் தனியான பிரதேச செயலகத்தின் கீழ் கட்டமைக்கப்பட வேண்டும் என குறித்த பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் 7 ஆயிரத்து 140 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் கண்டாவளை பிரதேசம் கரைச்சி பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டு கரைச்சி பிரதேச செயலகத்தின் உப அலுவல பிரிவாக கண்டாவளை பிரதேச செயலகம் செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் உப பிரதேச செயலகத்தின் அதிகாரங்களுக்கு உட்பட்ட வேலைத் திட்டங்களுக்கு கரைச்சி பிரதேச செயலகதத்தின் கண்டாவளை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளமுடிகின்ற போதும் அபிவிருத்தி, கட்டமைப்பு, சுற்றுச்சூழல் சம்பந்தமான விடயங்களுக்கு கரைச்சி பிரதேச செயலகத்திற்கு செல்ல வேண்டி இருப்பதால் குறித்த பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலின் போது தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கண்டாவளையை தனிப் பிரதேச செயலகத்தின் கீழ் கொண்டு வருவதென்று உறுதியளிக்கப்பட்டது.

ஆயினும் தேர்தல் முடிவடைந்து இரண்டு வருடங்களான போதும் கண்டாவளை பிரதேசத்தை தனிப்பிரதேச செயலக பிரிவின் கீழ் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

எனவே இம்மக்களின் நன்மையை கருத்திற் கொண்டு கண்டாவளை பிரதேசத்தை தனி பிரதேச செயலகமாக மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-5-263)

# யுவதிகளை இராணுவத்தில் ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை

(குருமன்காடு)

வவுனியாவில் இராணுவத்திற்கு பெண்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளதாக துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய வவுனியா நகர இராணுவ முகாமில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரையும் வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடியில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியிலிருந்து மாலை 5 மணிவரையும் இராணுவத்தில் சேர்ப்பதற்கான நேர்முகத் தேர்வுகள் நடைபெறவுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவில் நிர்வாக பணிகளுக்கு திறமையான யுவதிகளை இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையணிக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் உட்பட மாதாந்தம் 35 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மன்னாரில் இராணுவத்திற்கு பெண்களை இணைத்துக் கொள்ளும் முகமாக நேர்முகத் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் மன்னார் தள்ளாடி இராணுவ தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் இதற்கான நேர்முகத் தேர்வு நடைபெற்றது.

இதன்போது மன்னார், நானாட்டான், அடம்பன், சன்னார், பெரியமடு, ஈச்சலவக்கை போன்ற கிராமங்களைச் சேர்ந்த சுமார் 20 யுவதிகள் குறித்த நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டதாக மன்னார், தள்ளாடி இராணுவ தலைமைச் செயலகம் உறுதிப்படுத்தியுள்ளது. மேலும் மடு இராணுவ முகாமில் நேற்றையதினம் இதற்கான நேர்முகத் தேர்வு நடைபெற்றுள்ளது. (அ-2-250)

# ஆஸி. செல்ல வேண்டாம் என கூறி துண்டுப் பிரசுரங்கள்

(குருமன்காடு)

அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்வதை தடுக்கும் வகையில் வவுனியாவில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய வவுனியாவில் நேற்றையதினம் வீடு வீடாகச் சென்று கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் விநியோகித்து வருகின்றது.

இது தொடர்பான தகவல்கள் சுவரொட்டிகள் மூலமாகவும் ஒலிபெருக்கியின் மூலமாகவும் விழிப்புணர்வு செயற்பாடுகள் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. படகில் அவுஸ்திரேலியாவுக்கு செல்வதால் ஏற்படும் உயிர் ஆபத்துக்கள், பண விரயம் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைகள், கொள்கை மாற்றத்திற்கான காரணங் களை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்கள் விநி யோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த துண்டுப்பிரசுரங்களில் உங்களது பணத்தை வீண் விரயமாக்கவோ அல்லது உயிரை ஆபத்தில் இட்டுச் செல்லவோ வேண்டாம் என்ற தலைப்பில் அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை அமைச்சர் பிரெண்டன் ஓ.கொனரின் செய்தியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. (அ-2-250)

# கால்நடை சங்க புதிய கட்டடம் 3 மாதமாக திறக்கப்படவில்லை

## பாதிக்கப்பட்டோர் விசனம்

கண்டாவளை பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் செயற்பாடுகள் மந்தகதியில் நடைபெறுவதால் கால்நடை வளர்ப்பை மேற்கொள்பவர்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சங்கத்திற்கென அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட கட்டட அனைத்து வேலைகளும் முடிவடைந்த நிலையில் மூன்று மாதகாலமாக இதுவரையில் பாவனைக்கு உட்படுத்தாமல் காணப்படுவதாகவும் மக்களால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் பசுப்பால் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் என்பவற்றில் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே நிர்வாக கட்டமைப்பின்றி இயங்கும் இக்கால்நடை வளர்ப்போர் சங்கத்தை மீளப் புதுப்பித்து சிறந்த முறையில் செயற்படுத்தப்படவும் புதிய கட்டடத்தை பாவனைக்குட்படுத்தவும் உரியவர்கள் முன்வர வேண்டும் என பாதிக்கப்பட்டவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (அ-5-264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுக்கு எதிராக தூத்துக்குடியில் ஆர்ப்பாட்டம்

இலங்கை அரசு மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தூத்துக்குடியில் பத்திரிகையாளர்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலகம் முன்பு குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலங்கை அரசு மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டப் பேரவையில் கொண்டு வந்த தீர்மானத்தை இந்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

இனப் படுகொலை, போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள் போன்ற செயல்களில் ஈடுபட்ட இலங்கை மீது சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கு ஐ.நா.சபை உத்தரவிட வேண்டும்.

இலங்கையில் 60 ஆண்டு கால போராட்டத்திற்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் தமிழர் பகுதிகளிலும் புலம்பெயர் தமிழர் மத்தியிலும் ஐ.நா. சபை பொதுசுதந்திரமான வாக்கெடுப்பு எடுக்க வேண்டும்.

தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டும். முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழர்களுக்கு சுதந்திரமான வாழ்வுரிமைகளை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

இலங்கையில் ஊடகத்தினர் மீது தாக்குதல் தொடுப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எனவே இலங்கையில் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய ஐ.நா மேற்பார்வையில் கண்காணிப்புக் குழு அமைத்திட வேண்டும். (அ-2)

# பிக்கு மீதான தாக்குதல்; சந்தேகத்தில் மூவர் கைது

சென்னை புகையிரத நிலையத்தில் வைத்து இலங்கையைச் சேர்ந்த பௌத்த பிக்கு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய அரச புகையிரத பொலிஸார் அவர்களை கைது செய்துள்ளனர்.

புகையிரத நிலையத்தில் இருந்த சீ.சீ.டி.வி பாதுகாப்பு கமராக்களில் பதிவான காட்சிகளை கொண்டு தாக்குதலை நடத்தியவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் நாம் தமிழர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர். அவர்கள் தற்போது பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தமிழகத்தில் புகையிரதங்களில் பயணிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அதிக கண்காணிப்பாளர்களை நியமித்துள்ளதாக தமிழக புகையிரத பாதுகாப்பு ஆணையாளர் எஸ்.ஆர்.காந்தி தெரிவித்துள்ளார். (அ-2)

# இரட்டை குடியுரிமைக்கு புதிய நடைமுறைகள்

இரட்டை குடியுரிமை வழங்குவது தொடர்பில் புதிய நடைமுறையொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தற்போதும் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறை காணப்படுகின்றது. எனினும் இந்தமுறைமையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே புதிய நடைமுறையின் அடிப்படையில் இரட்டைக் குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் கொழும்பில் நிலவி வரும் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அரசாங்க நிறுவனங்கள் பலவற்றை பத்தரமுல்லை பிரதேசத்திற்கு நகர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# சென்னை பயணத்திற்கான விசா தற்காலிக இடை நிறுத்தம்

(கொழும்பு)

சென்னைக்கான விசா தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமைகள் காரணமாக இவ்வாறு சென்னைக்கு விசா வழங்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

யாத்திரைகளை மேற்கொள்வதற்காக சென்னைக்கு விசாக்களை வழங்கி வந்த பௌத்த சாசன அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.


தற்போதைய நிலைமைகளில் மாற்றம் ஏற்படும் வரையில் விசா வழங்கப்படமாட்டாது என தெரிவித்துள்ளது.

சென்னை ஊடாக இலங்கையர்கள் பயணம் செய்வது ஆபத்தானது எனவும் இதனால் இவ்வாறான யாத்திரைகளுக்கு வேறுவழிகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (அ-2)

# கோட்ட எல்லே போட்டி முடிவுகள்

வவுனியா கோட்ட மட்ட எல்லே போட்டி முடிவுகளை கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி நடராஜ் வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய ஆண்கள் பிரிவில் வவுனியா இந்துக்கல்லூரி முதலாமிடத்தையும் கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பூந்தோட்டம் மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளன. பெண்கள் பிரிவில் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் முதலாமிடத்தையும் பூவரசன் குளம் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் வவுனியா இந்துக்கல்லூரி மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளன. (அ-2-266)



இலங்கை வங்கி வல்வெட்டித்துறை கிளையில் கடந்த 8 ஆம் திகதி மகளிர் தின விழா கொண்டாடப்பட்ட போது யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர், யா/வல்வை மகளிர் கல்லூரி ஆகியோர் அதிகாரி திருமதி ஆர். தவச்செல்வத்தினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

# தர்மபுரம் வைத்தியசாலை கழிவுநீர் வாய்க்கால் துர்நாற்றம் வீசுகிறது

தர்மபுரம் பிரதேச வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள கழிவுநீர் வாய்க்கால் துர்நாற்றம் வீசுவதோடு தொற்றுநோய் பெருக்கத்தை அதிகரிக்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

குறித்த கழிவுநீர் வாய்க்காலில் தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் கழிவுநீரும் சென்றடைகிறது.

அத்துடன் வாய்க்காலினுள் வைத்தியசாலை கழிவுகளும் கொட்டப்படுகின்றன.

இதனால் கழிவுவாய்க்காலில் வைத்தியசாலையின் கழிவுநீர் தேங்குவதோடு துர்நாற்றம் வீசுகின்றமையால் அவ்வீதியால் செல்லும் மக்கள் அசௌகரியங்களைசந்திக்கின்றனர்.

இதேவேளை குறித்த வாய்க்காலில் தற்போது நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதோடு டெங்கு, மலேரியா போன்ற கொடிய நுளம்புக் காவி தொற்றுநோய்கள் பரவும் அபாய நிலை தோன்றியுள்ளது.

மக்களின் அதிக தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள இவ் வீதியில் இவ்வாறான துர்நாற்றம் வீசுகின்றது. நுளம்பு பெருக்கம் அதிகரிக்கக் கூடிய நிலையில் தள்ளப்பட்டுள்ள கழிவுவாய்க்கால் காணப்படுகிறது. எனவே உரிய சுகாதார பிரிவினர், வைத்தியசாலை நிர்வாகத்தினர் பிரதேச அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து செயற்பட வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. (அ-5-263)

# சனி, ஞாயிறு தினங்களில் பொதுநூலகம் மூடப்படுகிறது

**மக்கள் கடும் விசனம்**

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையினரால் நடத்தப்படுகின்ற பூநகரி பொதுசன நூலகம் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மூடப்பட்டிருப்பதால் பாடசாலை மாணவர்கள் விடுமுறை நாட்களில் இச்சபையினால் நடத்தப்படும் நூலக சேவையைப் பெறமுடியாதிருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த இருவாரங்களாக பூநகரி மகாவித்தியாலய மாணவர்கள் நூலகம் சென்ற போது நூலகம் மூடப்பட்டிருந்ததால் ஏமாற்றமடைந்தனர்.

அதன் பின்னர் தமது வேண்டுகோளை பூநகரி பிரதேச தவிசாளரிடம் கடிதமூலம் சமர்ப்பித்தும் மறுவாரமும் அவ்வாறே முடப்பட்டிருந்ததாகவும் தமது வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் அம் மாணவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பிரச்சினையில் தலையீடு செய்து சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மேற்படி நூலகத்தினைத் திறப்பதற்கு ஆவன செய்யுமாறு மாணவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-2-84)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# நம்பிக்கையில் நலமாய் வாழ்வோம்



நான் என் தந்தைக்குரிய செயல்களைச் செய்யவில்லை என்றால் நீங்கள் என்னை நம்ப வேண்டாம். ஆனால் நான் அவற்றைச் செய்தால் என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள் என்றார் இயேசு. இதைக் கேட்ட யூதர்கள் இயேசுவை மீண்டும் பிடிக்க முயன்றார்கள். ஆயினும் அங்கே வேறு பலர் இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர் எனும் வேதாகமப் பகுதி இன்று எமக்கு தரப்படுகின்றது.

இப்பகுதியை நோக்கும் போது நம்பிக்கை வாழ்க்கைக்கு மிகவும் அவசியம் என்பது துலங்குகின்றது. இறைசக்தியின் வல்லமை அதை நம்புவோரிடம் இருக்கும் என்பார்கள். ஒருமுறை முத்திபெற்ற அன்னை தெரேசாவிடம் இத்தனை அரிய காரியங்களைச் செய்வதற்குச் சக்தி உங்களுக்கு எங்கிருந்து கிடைக்கின்றது என்று கேட்ட போது அவர் இறைகருணையைச் சுட்டிக்காட்டினார்.

1982 ஆம் ஆண்டு நடந்த சாதனையாகவே கருதப்படுகிறது. ஒரு உண்மை சம்பவம். இங்கு பகிர்வது நல்லது என உண்ணுகின்றேன். ஸ்டீபன் கல்லகன்என்பவர் அட்லாண்டிக் பெருங்கடலில் தனியாக உல்லாசப் பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது அவரது படகு ஒரு ஒரு பாறையில் மோதி உடைந்துவிட்டது. ஒரு நாளல்ல, இரண்டு நாட்களல்ல எழுபத்திரண்டு நாட்கள். தன்னந்தனியாக அட்லாண்டிக் கடலில் ஒரு சின்னப் படகில் ஏறி அதுவும் ஒரு ஓட்டைப்படகில் எங்கே போகிறோம் என்று தெரியாமல் ஸ்டீபன் கல்லகன் அலைந்து திரிந்தார்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

அதில் ஒரு ஆள் மட்டுமே அமர இயலும். உண்ண உணவு கிடையாது. படுக்க இடம் கிடையாது. காற்று அடிக்கும் பக்கமெல்லாம் படகு போகிறது. கொடும் குளிரும் இருள் நிறைந்த இரவுகளும் தன்னந்தனியான பகல்கள் என்று எழுபத்திரண்டு நாட்கள் கழிந்திருக்கின்றனர்.

இதற்கிடையே அந்தப் படகின் ஓட்டைவழியே தண்ணீர் உள்ளே வர அதையும் மெல்ல மெல்ல வெளியே ஊற்றியிருந்திருக்கிறார்கள். குடிப்பதற்கு கடல் தண்ணீர்தான். கடலில் எப்போதாவது கையில் சிக்கும் மீன்கள் தான் உணவு. இறுதியில் அந்தப் பக்கமாக ஒரு கப்பலில் சென்று கொண்டிருந்தவர்கள் அவரைத் தற்செயலாக கண்டுபிடித்து கரை சேர்த்தனர். அதனால் தப்பியிருக்கிறார்கள்.

எப்படி உங்களால் வாழமுடிந்தது? என்று ஸ்டீபன் கல்லகனிடம் கேட்டபோது, எப்படியும் கரை சேர்ந்து விடுவோம் என்ற நம்பிக்கைதான் வாழ்க்கையை வழி நடத்துகிறது என்று பதில் தந்தார். எனக்கு உறுதியூட்டும் இயேசு கிறிஸ்துவால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு என நம்புவோம். நம்பிக்கையில் நலமாக வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா கதைகள்

# மழை பெய்விக்கும் முனிவர்



ரிஷ்யசிருங்கர் பிறக்கும் போதே தலையில் கொம்புடன் பிறந்தவர். இவரது தாய் தேவதையானாலும் சாபத்தால் ரிஷ்யமானாகி இருந்தபோது இவரைப் பெற்றெடுத்தாள். அதனால்தான் ரிஷ்யசிருங்கர் (மான் கொம்பு கொண்டவர்) என்ற பெயர் ஏற்பட்டது.

இவரை விபாண்டகர் என்ற முனிவர் இவருக்கு வெளியுலகைப் பற்றி எதுவும் தெரியவிடாமல் வளர்த்து வந்தார்.

ரிஷ்யசிருங்கர் காட்டிலுள்ள பறவைகளும் மிருகங்களும் திரிவதையும் கத்துவதையும்தான் அறிந்தவர்.

தம் தந்தையைத் தவிர வேறு எந்த ஆணையோ அல்லது பெண்ணையோ பார்த்ததே இல்லை. விபாண்டகர் அவருக்கு சாஸ்திரங்களையும் கற்றுக்கொடுத்தார். அவரிடம் ஓர் அபூர்வ சக்தி இருந்தது. மழை பொய்த்துப்போன இடத்திற்கு அவர் போனால் அங்கு நல்ல மழை பெய்யும்.

ஒருமுறை அங்கதேசத்தில் மழை பெய்யாமல் வறட்சி ஏற்பட்டது. அங்கமன்னன் ரோமபாதன் என்ன செய்வது என்று திகைத்தான். அப்போது அமைச்சர்கள் காட்டிலுள்ள ரிஷ்யசிருங்கரின் சக்தி பற்றிக்கூறினார்கள்.

மன்னனும் உடனே அவரைத் தன் நாட்டிற்கு அழைத்து வரத் தன் அமைச்சர்களை அனுப்பினான். ஆனால் விபாண்டகரோ அவரைத் தம் ஆசிரமத்திற்கு



வெளியே எங்குமே அனுப்ப முடியாது என்று பிடிவாதமாகக் கூறிவிட்டார். அவர்களும் பேசாமல் வந்தவழியே சென்றார்கள்.

ரோமபாதனிடம் அவர்கள் ரிஷ்யசிருங்கரை அழைத்து வர விபாண்டகர் தடையாக இருப்பதைக்கூறினார்கள். அப்போது அமைச்சர்களில் ஒருவர் ரிஷ்ய சிருங்கர். வெளியுலகைப் பார்த்ததேயில்லை. அதனால் விபாண்டகர் தம் ஆச்சிரமத்தில் சில நாட்கள் இல்லாத சமயமாகப் பார்த்து அவரை நம் நாட்டிற்கு அழைத்து வந்துவிட வேண்டும். அதற்காக அழகிய பெண்களை சுவையான தின்பண்டங்களுடன் அங்கே அனுப்பி அவரை மயக்கி நம் நாட்டிற்கு அழைத்துவந்துவிடலாம். அப்போது நம் நாட்டில் நல்ல மழை பெய்யும் என்றார்.

மன்னனும் அப்படியே செய்யலாம் என்றான். இயற்கையோடு ஒட்டி வாழும் ரிஷ்ய சிருங்கரை அழைத்துவர அழகிய பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். விபாண்டகர் ஏதோ ஒரு யாகத்திற்கு போயிருக்கிறார் என்றும் அவர் திரும்பிவர சில நாட்கள் ஆகும் என்றும் தெரிந்தது.

உடனே ரோம பாதன் அழகிய பெண்களை இனிப்பான தின்பண்டங்களோடு விபாண்டகரின் ஆச்சிரமத்திற்கு அனுப்பினான்.

அவர்களும் அங்குபோய்



ரிஷ்யசிருங்கரைக் கண்டார்கள். அவர் கள் தாங்கள் தவம் செய்ப வர்கள் எனக்கூறி இனிய பாடல்களைப் பாடி ஆடி அவரது மனதைக் கவர்ந்தார்கள். தாம் கொண்டு வந்த இனிப்புப் பட்சனங்களை புதுவித காய், கனி, கிழங்குகள் எனக்கூறி அவருக்குக் கொடுத்து சாப்பிட வைத்தார்கள்.

ரிஷ்யசிருங்கருக்கு எல்லாமே புதிதாக இருந்தது. அவர்களது தோற்றம், ஆடல் பாடல்கள், அவர்கள் கொடுத்த தின்பண்டங்கள் எல்லாமே அவரது மனதைக் கவர்ந்தன.

அவர்கள் அவரை தங்களுடைய ஆச்சிரமத்திற்கு வருமாறு அழைக்கவே அவரும் அவர்களோடு புறப்பட்டு விட்டார். அவர்கள் அவரை அங்க நாட்டிற்குக் கொண்டு போய்விட்டார்கள்.

அவரது காலடி அங்க நாட்டில் பட்டதும் நாடு முழுவதிலும் நல்ல மழை பெய்தது. மன்னன் ரோமபாதனும் அவரை வரவேற்று எல்லா மரியாதைகளையும் செய்து தன் மகள் சாந்தாவை அவருக்கு திருமணம் செய்து வைத்தார்.

பிற்காலத்தில் தசரதர் புத்திரகாமேஷ்டி யாகம் செய்ய ரிஷ்ய சிருங்கரை அழைத்துச் சென்றார். அந்த யாகத்தின் பயனாக இராமன், பரதன், இலட்சுமனன், சத்துருக்கனன் என்ற நான்கு புதல்வர்களை அவர் அடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

(79)

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

## எமிலிக்கும் இஷிமுராவுக்கும் விடைதரு விழா...



எமிலிக்கும் இஷிமுராவுக்கும் விடைதரு விழா. சீவிமுடித்துச் சிங்காரித்திருந்தது அட்டணம்பட்டி. கார்த்திகை மாத அருகம்புல் தரை மூடிப்படர்ந்திருப்பது மாதிரி மைதானம் முழுக்க மக்கள்.

"இந்த மண்ணுக்கென்று உண்டான கலைகளை நீங்கள் இப்போது காணப்போகிறீர்கள். போராட்டங்களாலும் துயரங்களாலும் சூழப்பட்ட எங்கள் வாழ்வில் ஒரு வெறுமை நிரப்பப்படாமலே கிடக்கிறது. எங்கள் மக்கள் தங்கள் சொந்தக் கலைகளால் அதை நிரப்பிக்கொள்கிறார்கள். கடவுளும் கூடக் கலையின் இன்னொரு பாகம்தான். இரண்டுமே வாழ்வின் வெறுமையை நிரப்ப வந்த இருவேறு பொருண்மைகள். இப்போது கோலாட்டம் பாருங்கள்" இருவரின் செவியோடு ஓதினான் சின்னப்பாண்டி.

பச்சைப் பாவாடையும் சிவப்புச் சட்டையும் அணிந்த பத்துப் பன்னிரண்டு சிறுமிகள் வட்டமிட்டு வட்டமிட்டுக் கோலாட்டமாடினர். இரு கோல்களும் எதிர்க்கோல்களில் உரச உரச நாதமும் நாட்டியமும் அங்கே ஒன்றோடொன்று பின்னிக் கொண்டன. ஒரு தாளகதியில் அவர்கள் குனிவதையும் நிமிர்வதையும் கோலடிப்பதையும் கண்டு குழந்தையாகி எழுந்து நின்று கை தட்டினாள் எமிலி.

"எளிமையான ஆட்டமிது எங்கள் ஊரில். என்னதான் கண்டீர்கள் இதில்?" என்றான் சின்னப்பாண்டி.

"ஒரு கோலாட்டம் மூன்று இன்பம் தருகிறது ஒரு பார்வையாளருக்கு"

"என்னென்ன?"

ஒரு கணம் கண்மூடி யோசித்துக் கோலாட்டத்தின் பெருமைகளை வரிசைப்படுத்தினாள் எமிலி:

"வண்ணச் சீருடை கண்ணுக்கு இன்பம்; கோல்களில் பட்டுத் தெறிக்கும் நாதம் காதுக்கு இன்பம்; கால்கள் எடுத்து வைப்பதும் கோல்கள் அடித்துவைப்பதும் ஒரு காலப் பிரமாணத்தில் நிகழ்வது மூளைக்கு இன்பம். கோலாட்டக்காரர்கள் குனிந்து குனிந்து நிமிந்து யோகாசனம் போன்றதோர் உடற்பயிற்சி. இந்தக் கலையைக் கண்டறிந்தவர்கள் புத்திசாலிகள்"

"உங்கள் கண்களில் பார்த்தால்தான் எங்கள் பெருமை தெரிகிறது" சின்னப் பாண்டி இழை இழையாய்ப் புன்னகைத்தான்.

☆☆☆☆☆☆

கரகாட்டம் ஆடவந்தாள் சிங்காரக் கோட்டை க னகலட்சுமி. அவளைக் கரகலட்சுமி என்று எடுத்துப் பிழையோடு எழுதினாலும் காரணப் பெயராய் மாறிவிடும். அவள் தலைக்கென்றே கரகம் பிறந்ததா இல்லை காரகம் அவள் தலையோடு பிறந்ததா என்று கொண்டாடுவார்கள் ஐந்தாறு மாவட்டங்களில் அவளை.

எமிலிக்கும் இஷிமுராவுக்கும் இமைக்கவில்லை கண்கள்.

அலங்கரிக்கப்பட்ட கரகமும் அசையாத தலையும், மையிட்ட கண்களும், மணிமூக்கும், பொய்யிட்டு வைத்தாலும் நெய்யிட்டு வைத்த ஆயுதங்களாய் நிமிர்ந்து நிற்கும் தனபரிவாரங்களும், உடையிட்டுக்கட்டியதால் ஒடியாத இடையும். பட்டினி கிடந்த பாம்புபோல் ஒட்டிய வயிறும் வந்துட்டேன் கனகலட்சுமி என்று கட்டியம்கூறும் கால் சதங்கையும் அவர்கள் காணாத ஓர் உலகம் காட்டி அடையாத அனுபவத்துக்கு ஆயத்தம் செய்தன.

சுழன்று சுழன்று ஆடினாள்; பறந்து பறந்து ஆடினாள்; தட்டாமாலை சுற்றினாள். தீவை மூழ்கடித்த சுனாமி மலையுச்சியை மட்டும் விட்டுவைத்ததைப்போல உடம்பெல்லாம் ஆடிச் சுழன்றாலும் கழுத்துக்கு மேலே



அதிர்வு வராமல் பார்த்துக்கொண்டாள். திடீரென்று சரிந்து தரையில் படுத்தாள். தலைமட்டும் தூக்கித் தரையில் படுத்தவள் வலக்கால் மடக்கி வலக்கை சேர்ந்தாள்; இடக்கால் மடக்கி இடக்கை சேர்த்தாள். மனிதப் பிறவி அல்லாத வேறோர் உயிர்ப் பொருளாய்த் தோற்ற மாற்றம் காட்டினாள்.

எமிலி அவளை ஓடி ஓடி வீடியோவில் படமெடுத்தாள்.

தன் சாகசத்தால் தரை மீண்டெழுந்த கரகக்காரி [illegible] கரகத்தை [illegible] தினாள். தலையை வளைத்துத் தன் பிடரிக்குக் கரகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கொண்டு சேர்த்தாள். விழுந்தாலும் விழுந்துவிடும் என்று எல்லாரும் பயந்தார்கள் கரகக்காரியைத் தவிர, ஆனால், தன் பிடரியின் பள்ளத்தில் கரகத்தை ஊற்றி வார்த்தது போல் உட்கார வைத்தாள். அப்படியே குத்த வைத்தாள். பிடரியில் கரகத்தோடு தரையில் வாய் வைத்தாள். மண்ணில் கிடந்த கோணி ஊசி ஒன்றைப் பல்லில் கடித்து எடுத்தாள். ஊசியைத் தன் நாக்கு மடிப்பில் படுக்க வைத்தாள். நாக்கில் உள்ள ஊசியும் தவறிவிடாமல் பிடரியின் கரகமும் இடறிவிடாமல் அதை மெல்ல மெல்லத் தலைக்கேற்றினாள்.

உடம்பெல்லாம் பரவிக் கிடந்த உயிர் கண்ணில் வந்து குவிந்துவிட்டது கூட்டத்துக்கு.

"யாத்தே... யப்பே..." கூட்டம் பதறுகிறது.

"அழகு; ஆச்சரியம்" இஷிமுரா ரசிக்கிறான்.

"இது எப்படி சாத்தியம்?" வாய் பிளக்கிறாள் எமிலி.

கரகத்தை மெல்ல மெல்ல மேலேற்றுகிறாள் கரகக்காரி.

கழுத்தையும் பிடரியையும் அங்குலம் அங்குலமாய் அசைத்தசைத்து அதோ அதோ தலையுச்சிக்குத் தள்ளிவிட்டாள். தலைப் பிரதேசத்தைக் கரகம் தொட்டதும் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்து ஓர் உலுக்கு உலுக்கினாள். திருவீதியுலா போயிருந்த தேர்மீண்டும் தேரடிக்கே திரும்பி வந்தது மாதிரி தலையாசனத்தில் மீண்டும் சிம்மாசனம் போட்டுக் கொண்டது கரகம்.

[illegible] வீசியடித்தது விசில். [illegible] கைதட்டினார்கள்.

"உங்கள் மீது எனக்கு வருத்தம்" என்றாள் எமிலி சின்னப்பாண்டியோடு பொய்க்கோபம் காட்டி.

"எதற்காக?"

"பாலே நடனத்தை உலகம் அறிந்திருக்கிறது. இத்தனை பெரிய கலையை நீங்கள் உள்ளூரில் வைத்தே மறைத்து விட்டீர்களே... உங்கள் கலை உலகக் கலை"

"இதற்கே உணர்ச்சிவசப்பட்டால் எப்படி? இனி சிலம்பாட்டம் பாருங்கள்" என்றான் சின்னப்பாண்டி.

☆☆☆☆☆☆

ஒற்றை மனிதராய்க் களத்தில் இறங்கி நின்றார் சிலம்பு அம்பலம். அவரை எதிர்த்தடிக்க ஆளில்லை ஏழெட்டு மாவட்டத்தில். பிரம்மபச்சாரியாகவோ காலம் கழிக்கும் சிலம்பு வாத்தியார் அவர். அன்று நெடுஞ்சிலம்பு கொள்ளாமல் குறுஞ்சிலம்பு வைத்திருந்தார் கையில். சலாம் வரிசையாடி பூமியிலே தண்டனிட்டு விதவிதமாய்ச் சுழற்றினார் சிலம்பை. அது காற்று கிழிக்கும் சத்தமே ஒரு சங்கீதம்.

மைதானத்தின் நான்கு திசையிலும் தன் நான்கு மாணவர்களை நிறுத்தி வைத்தார் அம்பலம். ஆளுக்கொரு சாக்கு நிறையக் கல் வைத்திருந்தார்கள்.

பம்பரம் மாதிரி கம்பு சுழற்றிக் கொண்டே "எறியுங்கள் என்மீது கல்லை" என்றார். ஒரே சமயத்தில் நான்குபேரும் சரமாரியாக அவர்மீது எறிந்தார்கள் கற்களை.

சுற்றும் சூறாவளியாய்த் தலைக்கு மேலே சுழன்று சிலம்பு அடித்துத் திரும்பி அனுப்பியது அத்தனை கல்லையும். ஒரு கல்லையும் அவர் உடம்பில் உரசக்கூட விடவில்லை. எவன் எறிந்தானோ அவன்மீதே கல்லைத் திருப்பி அடித்தது சிலம்பு. அதுகூட அல்ல ஆச்சரியம். திருப்பி அடித்த கல்லில் ஒன்றுகூடப் பார்வையாளர்கள்மீது படவில்லை. அண்டாவுக்குள் மட்டும் மழை பெய்தது மாதிரி மைதானத்துக்குள் மட்டும் விழுந்தன கற்கள். நான்கு சாக்கு தீர்ந்ததும் ஓய்ந்தது கல்மழை.

மூச்சுவிட மறந்து மூர்ச்சை நிலைக்குப் போனான் இஷிமுரா.

"நம்ப முடியவில்லை என் கண்களை. ஒரு கழியை எந்திரமாக்கும் தந்திரம் இது. மனித ஆற்றலை இது பன்மடங்கு பெருக்குகிறது. இது ஒரு தற்காப்புப் போர்முறைதான். கலை யுத்தத்தில் முடிந்துவிடக்கூடாது; ஆனால், யுத்தம் கலையில் முடியலாம். போர்முறையைக் கலையாக்கிவிட்டீர்கள். சீனாவின் குங்ஃபூ எங்களின் கராத்தே இரண்டுக்கும் மூலம் இதுவாக இருக்கலாம். உங்கள் மண்ணை மறக்க மாட்டேன்"

சின்னப்பாண்டியின் உள்ளங்கை தீண்டிய இஷிமுராவின் அழுத்தம் அவன் வார்த்தையின் உண்மையை வழிமொழிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியின் முடிவு மேற்குலகை ஈர்க்கும்

## சுமந்திரன் எம்.பி நம்பிக்கை

**இலங்கைத் தமிழர் நலன்களைக் கருத் தில் கொண்டு காங்கிரசுடனான கூட்டணியை முறித்து இந்திய மத்திய அரசிலிருந்து தி.மு.க. வெளியேறியமையை வரவேற்கிறோம். அத்து டன் தி.மு.க.வின் இந்த முடிவானது தமி ழகத்தில் ஈழத்தமிழர்களுக்காக எழுச்சி கொண்டுள்ள மாணவர் போராட்டங்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும் என்றும் இது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் என்றும் நாம் நம்புகிறோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ சுமந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார்.**

ஜெனீவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்திருக்கும் பிரேரணையில் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணை கோரும் திருத்தத்தை இந்தியா கோராவிட்டால் மத்திய கூட்டணியில் தி.மு.க தலைவர் கருணாநிதி கடந்த வெள்ளிக்கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இந்திய மத்திய ஆளும் காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க வெளியேறியிருக்கின்றது.

ஈழத்தமிழர் விடயத்தில் எந்த வகையிலும் பயன்படாத சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கு பிறகும் இந்திய மத்திய ஆட்சியில் தி.மு.க நீடிப்பது தமிழினத்துக்கே இழைக்கப்படும் பெரும் தீமை என இந்திய மத்திய அரசிலிருந்து விலகி கொண்டமை குறித்து தி.மு.க தலைவர் கருணாநிதி கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் தி.மு.க வின் இந்த முடிவு குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு, இன்று தமிழர்களுக்காக ஒட்டுமொத்த தமிழக மாணவர்கள் பேரெழுச்சிகொண்டு வீதிகளில் இறங்கி போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஐ.நாவில் இலங்கை அரசுக்கு எதிரான அமெரிக்க பிரேரணையை இந்திய மத்திய அரசு ஆதரித்து அந்த பிரேரணையைக் கடுமையாக்க வேண்டும் எனவும் இலங்கை அரசு மீது சர்வதேச சுயாதீன விசாரணை வேண்டும் எனவும் ஈழத்தமிழர்களுக்கு நீதி, தீர்வு கிடைக்க வேண்டும் எனவும் தமிழக மாணவர்கள் பொங்கி எழுந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

எந்த வித அரசியல் தலையீடுகளும் இன்றி கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக தமிழக மாணவர்களின் போராட்டம் தொடர்கின்றது. இந்நிலையில் மாணவர்களின் இந்த போராட்டங்களுக்கு அரசியல் கட்சிகளும் தமது ஆதரவை தெரிவித்து வருகின்றன.

அந்த வகையில் ஐ.நாவில் ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசு இதுவரை சரியானதொரு முடிவை எடுக்கவில்லை,எனக் கண்டித்தும் ஆளும் காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க வெளியேறியிருக்கின்றது.தி.மு.க வின் இந்த முடிவானது தமிழகத்தில் ஈழத்தமிழர்களுக்காக எழுச்சி கொண்டுள்ள மாணவர் போராட்டங்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும். அத்துடன் இது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும்.

இந்நிலையில் இந்திய மத்திய அரசின் ஆளும் காங்கிரஸ் கூட்டணியிலிருந்து ஈழத் தமிழர் நலன்களைக் கருத்தில் கொண்டு தி.மு.க வெளியேறியமைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நன்றி தெரிவிக்கின்றது. அத்துடன் தமிழக மாணவர்கள், மக்கள் ஆகியோரின் உணர்வுகளுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மதிப்பளித்து மத்திய அரசிலிருந்து தி.மு.க வெளியேறியமை பாராட்டத்தக்கதாகும்.

எனவே ஈழத்தமிழர்களுக்காக பொங்கியெழுந்து குரல் கொடுக்கும் எமது தொப்புள் கொடி உறவான தமிழகத்தின் அனைத்து உள்ளங்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் மீண்டும் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது எனவும் இந்த உணர்வெழுச்சிகளை கூட்டமைப்பு மதிக்கின்றது எனவும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்றார். (அ-2)

# இரத்ததான முகாம்

(இணுவில்)

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையத்தின் 11 ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவு விழா நடைபெறவுள்ளது.

இந்நிலையில் மேற்படி நிறைவு விழாவை முன்னிட்டு வருடந்தோறும் நடத்தப்படும் இரத்ததான நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நூலக கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இவ் உயிர் காக்கும் உன்னத பணியில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொண்டு இச் சேவைக்கு வலுச்சேர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-2)

# அப்பாவி மக்களை ஆளும் கட்சி பாதுகாக்க வேண்டும்

அப்பாவி மக்களே ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பை பாதுகாத்து வருவதாக சுகாதார அமைச்சரும் கட்சியின் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற சுகாதார அமைச்சின் நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

அப்பாவி மக்களும் ஏழ்மையான மக்களுமே தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பாதுகாக்கின்றனர். மாறாக அதில் உள்ள அமைச்சர்களோ உறுப்பினர்களோ இல்லை.

இந்த நிலையில் நாட்டில் உள்ள அப்பாவி மக்களை பாதுகாக்கும் பாரிய கடமை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நீரை பெற்றுக்கொள்ளவும் போராடியிருக்கின்றோம்

## மாவிலாறு விவகாரத்தை சுட்டிக்காட்டுகிறார் ஜனாதிபதி

ஜெனீவா செல்வோருக்கும் கடந்த காலம் நினைவில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உலக நீர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறுகையில்,


பயங்கரவாதிகள் மாவிலாறு அணையை மூடி மக்களின் மனித உரிமைகளை மீறியமை பலருக்கு நினைவில்லை.

நீரைப் பாதுகாப்பதற்காக உலகில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய போராட்டமாக மாவிலாறு அணை மீட்பு நடவடிக்கை கருதப்பட வேண்டும்.

நீர் காரணமாக உலகில் எவ்வளவு பெரிய போராட்டங்கள் வெடித்துள்ளன. மாவிலாறு அணையை புலிகள் மூடினர். அணையைத் திறக்குமாறு ஏழு நாட்கள் மிகவும் தயவாகக் கோரினோம்.

மக்களுக்கு குடிப்பதற்கு, விவசாயம் செய்வதற்கும் நீர் கிடைக்காத காரணத்தினால் தாக்குதல் நடத்தி அணையைத் திறக்க நேரிட்டது.

சுத்தமான குடிநீரை பாதுகாப்பதற்கு நிபந்தனையின்றி ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)



மாதகல் துணைசை வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது...(படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# எமது மக்களின் அவல வாழ்க்கைக்கு தீர்க்கமான ஓர் முடிவு வேண்டும்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

எமது மக்களும் இந்நாட்டில் சகல உரிமைகளையும் சகல வசதி வாய்ப்புக்களையும் பெற்று வாழவேண்டும் என்றே விரும்புகின்றார். இவ்வாறு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கனடா வாழவைப்போம் அமைப்பின் நிதிப் பங்களிப்பில் இராமநாதபுரம் றங்கன் குடியிருப்பு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

எமது மக்களது தறப்பாள், தகரக்கொட்டில் அவல வாழ்க்கைக்கு ஒரு முடிவு வேண்டும்.

எமது பகுதிகள் அபிவிருத்தி அபிவிருத்தி என்று சொல்லப்படுகின்றதே தவிர எமது மக்கள் இப்படியான பல கிராமங்களில் கஷ்டத்தோடும் வசிப்பதற்கு ஒரு ஒழுங்கான வீடு கூட அற்ற நிலையில் அவல வாழ்க்கைதான் வாழ்கிறார்கள்.

இப்படி அவலப்படும் இந்த மக்களது சிறார்கள் எப்படிக் கல்வியைக்கற்க முடியும் பாடசாலையில் கற்கும் கல்வியை வசிப்பதற்கு ஏற்ற இடவசதிகள் அற்ற இந்த தறப்பாள் கொட்டகைக்குள் எப்படிக் கற்க முடியும்? ஏ9 வீதியின் அபிவிருத்தி பற்றிக்கூறி அந்த வீதியில் நின்று பார்த்து விட்டு எமது மக்களுக்கும் சகல உதவித்திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

நிம்மதியாகவும் நிறைவாகவும் வாழ்கின்றார்கள் என்று கூறுபவர்கள் இப்படியான கிராமங்களுக்கு வந்து இந்த மக்களின் அவலநிலை பற்றி, உண்மை நிலையைப் புரிந்து கொள்ளவேண்டும்.

எமது மக்களும் இந்த நாட்டில் சகல உரிமைகளையும் பெற்று சகல வசதி வாய்ப்புகளுடனும் வாழவேண்டும் என்றே விரும்புகின்றார்கள். எமது மக்களும் உண்மையான அபிவிருத்தியின் பலனை அனுபவிக்க வேண்டும்.

எமது மாணவச் சிறார்களும் ஏனைய பகுதி மாணவர்கள் பெற்றுள்ள சகல வளங்களையும் உரிமைகளையும் பெற்று கல்வியில் முன்னுக்கு வரவேண்டும் என்பதே எமது எல்லோருடைய எதிர்பார்ப்பாகவுள்ளது என்றார். (அ-2)

# அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் இலங்கைக்கு ஆதரவு

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு ஆதரவை வெளிப்படுத்தி இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் உள்ள இலங்கையின் ஐக்கிய நாடுகளுக்கான நிரந்தர வதிவிட அலுவலகம் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மாநாட்டில் நேற்று புதன்கிழமை இலங்கை சமர்ப்பித்த அறிக்கையை தாய்லாந்து, சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் வரவேற்றிருந்தமையை இந்த அறிக்கையில் மேற்கோள்காட்டப்பட்டுள்ளது.

இந்த நாடுகள் இலங்கையின் புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் போன்ற விடயங்களை சிறந்த முறையில் வரவேற்றிருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையை சந்திக்க தயாராகவுள்ளேன்

## முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா

விடுதலைப் புலி தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய புதல்வன் பாலச்சந்திரனை நாங்கள் கொல்லவில்லை என இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த 2009 இல் விடுதலை புலிகளுடன் நடந்த சண்டையின் போது இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா 2010 இல் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிட்டதால் ஊழல் குற்றம் சாட்டப்பட்டு 2 ஆண்டுகள் இராணுவ சிறையில் அடைக்கப்பட்டார்.

தற்போது புதிய கட்சி ஆரம்பித்துள்ள சரத் பொன்சேகா கொழும்பில் நடந்த வெளிநாட்டு நிருபர்கள் கூட்டத்தில் கூறியதாவது,

லண்டனை சேர்ந்த தனியார் தொலைக்காட்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்ட காட்சி ஒளிபரப்பானது. இந்த காட்சி ஜோடிக்கப்பட்டது. பாலச்சந்திரன் பக்கத்தில் நிற்கும் வீரர் அணிந்திருக்கும் சீருடையை எங்கள் இராணுவ வீரர்களுக்கு நாங்கள் வழங்கவில்லை. இந்த சீருடை இந்திய இராணுவத்தினர் அணிவது. இது போன்ற சீருடைகளை கள்ளத்தனமாக பயன்படுத்தி விடுதலை புலிகள் இறுதிக் கட்ட சண்டையில் ஈடுபட்டனர்.

இலங்கை இராணுவம் பயன்படுத்திய பதுங்கு இடங்கள் மிகவும் சிறியவை. பாலச்சந்திரன் அமர்ந்திருக்கும் இடம் சுத்தமாகவும் பெரியதாகவும் உள்ளது. அதுபோன்ற பதுங்கு அரண்கள் இலங்கை இராணுவத்திடம் கிடையாது. எனவே, இந்தப் படம் போலியானது. இலங்கை போர் தொடர்பாக எந்தவிதமான சர்வதேச விசாரணையையும் சந்திக்க தயாராக இருக்கிறேன். முன்னாள் தளபதி என்ற முறையில் எனக்கும் இந்த பொறுப்பு உள்ளது.

இலங்கை அரசு போர்க் குற்றம் தொடர்பான விசாரணையை சந்திக்க தயங்குகிறது. இறுதிக்கட்ட சண்டையின் போது என்ன நடந்தது என்பதை அறிய மக்கள் விரும்புகின்றனர்.

இச்சந்தேகம் களையப்பட வேண்டும். போர்க்குற்றம் தொடர்பான விசாரணையை சந்திக்க மறுத்தால் இலங்கை அரசு எதிர்காலத்தில் ஏராளமான சர்வதேச குற்றச்சாட்டுக்களை சந்திக்க வேண்டியிருக்கும் என அவர் கூறினார். (அ-2)

# இனப்படுகொலைக்கு இந்திய அரசும் கூட்டுக் குற்றவாளி

## வைகோ தெரிவிப்பு

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு இந்தியாவும் பொறுப்பேற்க வேண்டும். ஈழத்தமிழர்கள் கொத்துக்கொத்தாகமடிந்துபோனதற்கு இந்தியாவும் கூட்டுக் குற்றவாளிதான் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வலியுறுத்தியும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளையமகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும் மும்பையில் உள்ள ஆசாத் மைதானத்தில் கடந்த புதன்கிழமை காலை 11.30 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ம.தி. மு.க பொதுச் செயலாளர் வைகோ தலைமை தாங்கினார்.

அப்போது அவர் உரை நிகழ்த்துகையில், இனப்படுகொலை செய்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும். தனி ஈழம் உருவாக பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் நடைபெற்றது போர்க்குற்றம் மட்டுமல்ல. அது ஒரு இனப்படுகொலை. இந்தப் படுகொலைக்கு இலங்கைக்கு உதவிய இந்திய அரசும் கூட்டுக் குற்றவாளிதான் என குற்றம் சாட்டினர்.

ஆர்ப்பாட்டத்தில் சிவசேனா எம்.பி., சஞ்சய்ராவுத், மும்பை பா. ஜனதா தலைவர் ராஜ்புரோகித், மராட்டிய நவநிர்மாண் சேனா எம்.எல்.ஏ.நந்காவ்ங்கர் மற்றும் மும்பையில் உள்ள அனைத்து தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (அ-2)

# ஆலோசனை வழிகாட்டல் பயிற்சி பட்டறை

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் சேவைகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறை இன்று வெள்ளிக்கிழமை வவுனியா தெற்கு வலய கல்வி அலுவலக முதன் நிலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.செ. அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ள இப் பயிற்சி பட்டறையில் ஆலோசனை வழிகாட்டல் நுட்பங்கள், அணுகுமுறைகள், தொழில் வழிகாட்டல் செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்தும் நுட்பங்கள், சிறுவர்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடுகள், கட்டிளமைப்பருவ பிரச்சினைகளை கையாளல் போன்ற விடயங்கள் இடம் பெறவுள்ளன.

இப்பயிற்சி பட்டறையில் வளவாளர்களாக வவுனியா பொது வைத்தியசாலையில் உள நல மருத்துவர் சி.சுதாகரன், வவுனியா தெற்கு வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆறு. சுபாஸ்கரன், தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி ந.க. கிறேனியர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2-266)

# இளைஞர் கழக தலைவர்களுக்கு தலைமைத்துவ கருத்தரங்கு

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் புதிய நிர்வாகிகள், பிரதேச இளைஞர் கழகங்களின் தலைவர்களுக்கான தலைமைத்துவ மற்றும் செயற்றிட்ட விளக்க செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை முழு நேர செயலமர்வாக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

இச்செயலமர்வினூடாக ஆற்றல் மிக்க, சிறந்த தலைமைத்துவ பண்புள்ள இளந் தலைவர்கள் உருவாக்கப்படுவதோடு அவர்களினூடாக இவ் வருடத்தில் குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள இளைஞர் மற்றும் பிரதேச நலத்திட்ட செயற்பாடுகளுக்கான நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்படவும் உள்ளது.

இச்செயலமர்வின் பிரதம அதிதியாக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சிவநேஸ்வரன், வளவாளர்களாக முன்னாள் இளைஞர் சேவைகள் வடமாகாண பணிப்பாளர் சிவதட்ணாமூர்த்தி மற்றும் லயன்ஸ் மாவட்ட தலைமைத்துவ பயிற்சி பிரிவுத் தலைவர் லயன்.செ. ஞானராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# தமிழக மாணவர் போராட்டத்திற்கு பிரிட்டன் மாணவர்களும் ஆதரவு

தமிழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழீழத்திற்கான புரட்சிப் போராட்டத்திற்கு ஆதரவாக பிரித்தானியத் தமிழ் மாணவர்களால் இன்னுமோர் புரட்சிப் போர் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டம் நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் Grosvenor Square பகுதியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்னிலையில் நடைபெற்றது.

இதில் பெரும்பாலான தமிழ் மக்களும் கலந்து கொண்டதுடன் நாங்கள் தமிழக மாணவர்களை ஆதரிக்கின்றோம். அமெரிக்காவே இன அழிப்பை ஆதரிக்காதே, உலக நாடுகளே ஆணைக்குழு அறிக்கையை நிராகரி மற்றும் தமிழர்களுக்கு தமிழீழம்தான் ஒரே தீர்வு போன்ற வசனங்களையும் தாங்கிய வண்ணம் குறித்த போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தின் இறுதிவரையில் கலந்துகொண்ட மாணவர்கள் தமிழருக்கான தீர்வான தனித் தமிழீழம் அமையும் வரையில் இனி உலகம் முழுவதும் தொடர்ந்தும் மாணவர் புரட்சி வெடித்துக் கொண்டே இருக்கும் என்று சபதம் எடுத்து கலைந்து சென்றனர். (அ-2)




★1622-வேர்ஜினியாவில் ஜேம்ஸ்டவுன் நகரில் அல்கோன்கியான் பழங்குடிகள் 347 ஆங்கில குடியேற்றவாசிகளைப் படுகொலை செய்தனர்.

★1829-கிரேக்கத்துக்கான எல்லைகளை மூன்று வல்லரசுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகியன வரையறுத்தன.

★1873-புவேர்ட்டோ ரிக்கோவின் ஸ்பானிய தேசிய சபையில் அந்நாட்டில் அடிமைத் தொழிலை அழிக்க சட்டமியற்றப்பட்டது.

★1895-முதன் முதலாக லூமியேர சகோதரர்கள் அசையும் திரைப்படத்தை பிரத்தியேகமாகக் காண்பித்தார்கள்.

★1939- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி லித்துவேனியாவிடம் இருந்து மெமெல் பிரதேசத்தைக் கைப்பற்றியது.

★1943-இரண்டாம் உலகப் போர்: பெலாரசின் காட்டின் நகர மக்கள் அனைவரும் நாசி ஆதிக்கவாதிகளால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர்.

★1945-அரபு கூட்டமைப்பு கெய்ரோவில் அமைக்கப்பட்டது.

★1960-ஆதர் ஷாவ்லொவ் மற்றும் சார்ள்ஸ் டவுன்ஸ் ஆகியோர் லேசருக்கான முதலாவது காப்புரிமத்தைப் பெற்றார்கள்.

★1965-இலங்கையில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து டட்லி சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தது.

★1993-இன்டெல் நிறுவனம் முதல் பென்டியம் Chip (80586) இனை அறிமுகம் செய்தது.

★1995-சோவியத் விண்வெளி வீரர் வலேரி பொல்யாக்கொவ் விண்ணில் 438 நாட்கள் கழித்துவிட்டு பூமி திரும்பினார்.

★1997- ஹேல்- பொப் வால்வெள்ளி பூமிக்குக் கிட்டவாக வந்தது.

★2004-ஹமாஸ் இயக்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவரான அஹமது யாசின் இஸ்ரேலிய வான் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

★2006-பாஸ்க் ஆயுதக்குழு ஈடிஏ கால வரையறையற்ற போர் நிறுத்தத்தை அறிவித்தது.

### பிறப்புக்கள்

★1868-ரொபேர்ட் மில்லிக்கன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1953)

★1931-பேர்ட்டன் ரிக்டர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புக்கள்

★1627-பிலிப்பே டி ஒலிவேரா, யாழ்ப்பாணத்தின் முதலாவது போர்த்துக்கேய ஆளுநர்

★1952-டி.எஸ்.சேனநாயக்கா, இலங்கையின் முதலாவது பிரதமர் (பி.1884)

## டட்லி - செல்வா ஒப்பந்தம்

1965 மார்ச் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐ.தே.க. 66 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 41 ஆசனங்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 14 ஆசனங்களையும் லங்கா சமசமாஜக் கட்சி 10 ஆசனங்களையும் கைப்பற்றின. 151 ஆசனங்களில் 76 ஆசனங்கள் இருந்தாலே ஆட்சியமைக்க முடியும். எனவே, ஐக்கிய தேசியக் கட்சி மிகுதி ஆசனங்களுக்கு ஏனைய கட்சிகளின் ஆதரவைத்தேட வேண்டியிருந்தது. இந்நிலையில் ஐ.தே.கட்சிக்கு அரசமைக்கும் பங்காளியாக தமிழரசுக் கட்சி முன்வந்தது. அதனைத் தொடர்ந்தே மார்ச் மாதம் 24 ஆம் திகதி டட்லி- செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோடி மாணவரின் முழக்கத்தின் நடுவே... இந்தியாமீது ஒரு பார்வை




ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மான வரைபு இறுதிப்படுத்தப்பட்டு வாக்கெடுப்புக்குத் தயாராகிய நிலையில் தீர்மானத்தின் மீதான விவாதமும் சாத்தியப்பட்டுள்ளது. அமெரிக்கா முன்வைத்த இந்தத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பை இலங்கை கோராது போனால், அது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகிவிடும். அதாவது, இலங்கை அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதாக கருதப்படும்.

ஆகவே, இலங்கை அத்தீர்மானத்தின் மீது வாக்கடுப்பு நிகழ்த்தப்படவேண்டும் எனக் கோரியிருந்தது.

ஐ.நா மனித உரிமை பேரவையில், இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் இன்னும் கடினமானதாக இருக்கவேண்டும் என்பது, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கருத்தாக இருக்கிறது. அதேவேளை, சீனா, ரஷ்யா, கியூபா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக இருப்பதுடன் தீர்மானம் தேவையற்றது என்றும் கருதின. ஆனால், இந்த நாடுகளில் பாகிஸ்தான் மட்டும்தான் பேரவையில் வாக்குரிமையைக் கொண்டுள்ளது. வேறு சில நாடுகள் தீர்மானம் கடினமாக இருக்கத் தேவையில்லை என்றும் கூறியிருந்தன.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையைப் பொறுத்தவரையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் என்பது, உலகத்தை பல நிலைப்படுத்தியுள்ளது என்பதே சரியானது. அமெரிக்காவின் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பைக் கோருவதற்கு இலங்கை, பாகிஸ்தான் ஊடாகவே அதனை மேற்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. வேறு மிக நெருங்கிய நட்பு நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்குக் கிடையாது.

உண்மையில் வாக்கெடுப்பு ஒன்று நிகழ்வதை இந்தியா விரும்பியிருக்கவில்லை. ஏனெனினல் வாக்கெடுப்பு நடத்தப்படுவதால், இந்தியா ஏதாவதொருபக்கம் நிற்க வேண்டும். அவ்வாறு ஒரு தரப்பின் பக்கம் சார்ந்து கொள்வதை இந்தியா விரும்பவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

# இலங்கை மீதான இந்தியாவின் கடிவாளம் கழன்றுவிட்டது...!




முதலாவது,

தீர்மானத்தை ஆதரித்தால் இலங்கையின் கோபத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டும். கடந்தமுறை தீர்மானத்தை ஆதரிக்கப் போய், இலங்கையுடனான உறவை இன்று வரை சீர்ப்படுத்திக் கொள்ள முடியாதுள்ளது. இம்முறையும் அதேபோன்று ஆதரித்தால், இலங்கையுடனான நெருக் படாமலேயே தீர்மானத்தை இணக்கத்துடன் ஏற்கின்ற நிலையை இந்தியா விரும்புகின்றது. அமெரிக்கத் தீர்மான விடயத்தில், வாக்கெடுப்பைத் தவிர்ப்பதற்கு இந்தியா ஆரம்பத்தில் இருந்தே முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. எனினும் இலங்கை வாக்கெடுப்பை கோரியுள்ளது.

இரண்டாவது காரணம்,

கத்தை அல்லது இலங்கையின் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடிய திறனை இழந்து போக நேரிடுமோ என்ற கலக்கம் இந்தியாவுக்கு உள்ளது. தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தால், தமிழ் நாட்டின் கோபத்தை எதிர்கொள்ளவேண்டி வரும். அது புதுடெல்லியில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

இந்த இரண்டு பிரச்சினைகளிலும் சிக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டுமானால் தீர்மானத்தை எதிர்த்தோ ஆதரித்தோ வாக்களிக்கக் கூடாது. நடுநிலை வகிப்பதானாலும்கூட, விமர்சனங்களையும் சிக்கல்களையும் புதுடெல்லி எதிர்கொண்டாக நேரிடும். எனவேதான் வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்

அமெரிக்கத் தீர்மானம் தனக்கான பொறி என்று இந்தியா நம்புகின்றது.

அதாவது, அமெரிக்கா கொண்டுவந்துள்ள தீர்மானம் அப்படியே நிறைவேற்றப்பட்டால் உண்மை கண்டறியும் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணிகயகத்தின் தொழில்நுட்ப உதவிகள் மற்றும் ஆலோசனையுடன் உண்மை கண்டறியும் குழு அமைக்கப்படுமானால் போரின்போது இடம்பெற்ற மீறல்களையும் அதற்குப் பொறுப்பானவர்களையும் மட்டும் அது பட்டியலிடப்போவதில்லை. அதற்கும் அப்பால் போர்க்குற்றங்கள் இடம்பெற்ற சூழலும் விசாரிக்கப்படும். அத்தகைய விசாரணைகள், போர்க்காலத்தில் இலங்கைக்கான தமது ஒத்துழைப்புகளை வெளிச்சத்துக்கு கொண்டுவந்து விடும் என்பதை இந்தியா நன்கறியும். அத்தகைய நிலை ஏற்படுவதை இந்தியா விரும்பவில்லை. அதுமட்டுமன்றி இந்தியாவின் காஷ்மீரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற குரலும் சர்வதேச அரங்கில் மேலோங்கும். இப்போது, ஆப்கானிலும், ஈராக்கிலும், லிபியாவிலும், அமெரிக்கா செய்யாத மனித உரிமை மீறல்களையா போரின் போது நாம் செய்துவிட்டோம் என்ற தொனியில், இலங்கையில் உள்ள சிங்களத் தேசியவாதிகளும் அமைச்சர்களும் கேள்வி எழுப்புகின்றனர். அதேபோன்று இந்தியா மீதும் இலங்கையில் இருந்து நிச்சயம் கேள்வி எழுப்பப்படும்.

காஷ்மீரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, 1994 ஆம் ஆண்டு ஐ.நா.வில் பாகிஸ்தான் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருந்தது. அப்போது அமெரிக்காவுடன் இந்தியா அவ்வளவு நெருக்கமில்லை. அந்தத் தீர்மானத்தால் கடும் நெருக்கடியை இந்தியா எதிர்கொண்டது. கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்படும்பட்சத்தில், இந்தியா தடைகளை எதிர்கொள்ளும் சூழல் ஒன்று ஏற்பட்டது. அப்போது பிரதமாராக இருந்த பி.வி. நரசிம்மராவ், மிகவும் சாதுரியமாக எதிர்க் கட்சித் தலைவராக இருந்த அடல்பிகாரி வாஜ்பாய் தலைமையிலான குழுவை அனுப்பி அந்த நெருக்கடியை சமாளித்தார்.

வாஜ்பாயுடன் காங்கிரஸ் அரசின் சார்பில் ஐ.நா.வுக்குச் சென்றவர் வேறு யாருமல்ல, இந்தியாவின் இப்போதைய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தான். கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு முன்னர் காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா எதிர்கொண்ட நெருக்கடியை சல்மான் குர்ஷித் அவ்வளவாக மறந்திருக்க மாட்டார். இப்போது இலங்கைக்கு வைக்கப்படும் *பொறி* இந்தியாவையும் இழுத்து வீழ்த்திவிடும் என்பதில் அவர், கவனமாகவே இருக்க முனைவார்.

இதனால், தான் சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மான வரைபு தொடர்பாக அமெரிக்காவுடன் சமரசம் செய்து கொள்ளும் படி, இலங்கையை இந்தியா நச்சரித்து வருகிறது. இவ்வாறான இணக்கம் ஏற்பட்டால், தனக்கான நெருக்கடிகளைக் குறைத்து விடும் என்றும், தீர்மானத்துக்கு ஆதரவாகவோ எதிராகவோ வாக்களித்து சிக்கலில் மாட்டிக்கொள்ளாமல் தவிர்க்கலாம் என்றும் இந்தியா எதிர்பார்க்கிறது. எனினும் இந்தியாவின் அறிவுரையை ஏற்று அமெரிக்காவுடன் சமரசம் செய்துகொள்ள இலங்கை தயாராக இல்லாது போனால்கூட இலங்கை மீதான இந்தியாவின் கடிவாளம் கழன்றுவிட்டது என்றே அர்த்தம்.

வாக்கெடுப்பில் இந்தியா ஆதரிக்கிறதா இல்லையா என்ற விடயம் இரண்டாம் பட்சமாகிவிடும். அதேவேளை, அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கிறதோ இல்லையோ, பெரும்பாலான நாடுகள் அதனை ஆதரிக்கின்றன என்பது உறுதியாகிவிட்டது. கடந்த முறை இந்தியாவின் முடிவு முக்கியமானதாக கருதப்பட்டது. ஆனால், இதுவரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தீர்மானம் குறித்து இந்தியா வாய் திறக்காத போதிலும், இந்தியாவை நம்பித் தீர்மாணம் இல்லை, என்பது உறுதியாகியுள்ளது.

காரணம், இலங்கை மீதான அவநம் பிக்கை சர்வதேச அளவில் வலுவடைந்துள்ளது.

அந்த ஆதரவைப் பயன்படுத்தி அமெரிக்கா தீர்மானத்தை நிறை ேவற்ற முற்பட்டது.

தீர்மானத்துக்கு சுமார் 33 நாடுகள் ஆதரவாக இருப்பதாகவும் 14 நாடுகளே இலங்கைக்கு ஆதரவு அளிப்பது அல்லது நடுநிலை வகிப்பது என்ற நிலைப்பாட்டில் உள்ளதும் தெரியவந்துவிட்டது. எது எவ்வாறாயினும் இந்தத் தீர்மான விடயத்தில், இலங்கையுடனான உறவைக் கருத்தில் கொண்டு இந்தியா தீர்மானத்தை எதிர்த்தாலோ அன்றி நடுநிலை வகித்தாலோ கூட, இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு அது ,சவாலானதே. ஏனென்றால், இலங்கை விவகாரத்தில் தலைமை தாங்கும் பாத்திரம் இந்தியாவின் கையில் இருந்து நழுவிப்போய்க் கொண்டிருக்கிறது.

**தொல்காப்பியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அப்பிளுக்கு சவால் விடும் சாம் சங்கின் சிமாட் கடிகாரங்கள்

கைப்பேசி உற்பத்தியில் அப்பிள் நிறுவனத்திற்கு சவால் விடும் அளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ள சாம்சங் நிறுவனமானது தற்போது கைக்கடிகார உற்பத்தியிலும் அப்பிளுக்கு சவால் விடத் தயாராகின்றது.

அதாவது அப்பிள் நிறுவனம் ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை அறிமுகப் படுத்தவுள்ளதாக அறிவித்த சில வாரங்களில் அதிநவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது சாம்சங்.

அவ்வாறு வெளியிடப்பட்டால் உலகிற்கு முதலாவதாக ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை அறிமுகப்படுத்திய நிறுவனங்கள் என்ற பெயரை அப்பிள் நிறுவனமும், சாம்சங் நிறுவனமும் பெற்றுக் கொள்ளும் என்பதுடன் இவற்றுக்கு மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பும் காணப்படும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை.

## ASUS இன் புதிய Tablet அறிமுகம்

முன்னணி கணனி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றாகத்திகழும் ASUS நிறுவனமானது Transformer AiO எனும் விண்டோஸ் 8 மற்றும் அன்ரோயிட் இயங்குதளங்களை ஒருங்கே கொண்ட டேப்லட்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இவை 18.4 அளவு மற்றும் 1,920 X 1,080 பிக்சல்கள் ரெசொலேசன் உடைய HD தொடுதிரைகளைக் கொண்டுள்ளதுடன் 32GB சேமிப்பு வசதியையும் கொண்டுள்ளன.

மேலும் இவற்றில் காணப்படும் மின்கலங்கள் தொடர்ச்சியாக 5 மணித்தியாலங்கள் வரை தொழிற்படக்கூடியதாக அமைந்துள்ளமையும் சிறப்பம்சமாகும்.



## Scanner Mouse

கணனிப் பாவனையில் சுட்டிகளின் (Mouse) பயன்பாடானது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இதனால் காலத்திற்கு காலம் பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக வெவ்வேறு சுட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளன. இவற்றின் தொடர்ச்சியாக தற்போது IRIS நிறுவனமானது OCR தொழில்நுட்பத்துடன் கூடிய Scanner Mouse அறிமுகப்படுத்தியுள்ளது. USB 2.0 இணைப்பிகளை உடைய இந்த சுட்டிகளின் மூலம் எந்தவிதமான மேற்பரப்புக்களில் காணப்படும் எழுத்துக்களையும் ஸ்கான் செய்யக்கூடியதாகக் காணப்படுகின்றது. இதற்காக குறித்த சுட்டியுடன் தரப்பட்டுள்ள ஸ்கான் செயவதற்கான பொத்தானை அழுத் தியதும் சுட்டி காணப்படும் மேற்பரப்பிலுள்ள எழுத்துக்கள் ஸ்கான் செய்யப்படும். இந் நவீன ரக சுட்டிகளை 79 அமெரிக்க டொலர் பெறுமதியில் கொள்வனவு செய்யமுடியும்.



## கூகுளின் படைப்புகள்

இணையத்தள சேவைக்கு அப்பால் இலத்திரனியல் சாதன உற்பத்தியிலும் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துள்ள கூகுள் நிறுவனமானது அதன் புதிய வெளியீடான Nexus 10 டேப்லட்களைவிரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது. 2560 x 1600 Pixel Resolution கொண்ட திரையுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த டேப்லட்கள் உலகின் முதலாவது அதிகூடிய Resolution உடன்கூடிய டேப்லட்கள் என்ற பெயரையும் தாங்கிவருகின்றன. மேலும் இவற்றில் 5 மெகாபிக்சல்கள் மற்றும் 1.9 பிக்சல்கள் உடைய இரு கமெராக்களும் காணப்படுவதுடன் 16GB, 32GB ஆகிய சேமிப்பு வசதிகளைக் கொண்ட இரு பதிப்புக்களாக வெளிவரவுள்ளன. இந்த டேப்லட்களில் இணைக்கப்பட்டுள்ள 9000 mAh மின்கலமானது தொடர்ச்சியாக 7 மணித்தியாலங்கள் வரை செயறபடக்கூடியன.

## எரிபொருள் தேவையில்லை

புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவதில் அதிக ஆர்வம் உள்ள பீட்டர் டியர்மான் என்பவர் சமீபத்தில் குளிர்ந்த காற்று மூலம் இயங்க கூடிய ஒரு புதிய காரை கண்டுபிடித்தார். இவர் ஏற்கனவே தான் வைத்திருந்த, 25 வருடங்களாக பயன்படுத்தி வந்த காரை மாற்றியமைத்துள்ளார்.


190 பாகை செல்சியல்ஸ் காற்றை குளிர் காற்றாக மாற்றி அவற்றை சிறிய மதுபான தகரத்தில் அடைத்து அதை வெப்பத்தின் மூலம் சக்தியாக மாற்றி காரை இயக்கி வெற்றி பெற்றுள்ளார். இதனால் சுற்றுப்புற சூழலுக்கு எந்த மாசும் ஏற்படாது, எரிபொருளின் விலையும் மிக குறைவு என பீட்டர் டியர்மான் தெரிவித்துள்ளார்.

இக்கார் மணிக்கு 48 கி.மீ வேகத்தில் இயங்குகிறது. அதை 61 வயது பிஷப் ஸ்டோர்ட்போர்டு, ஹெர்த் போர்டு ஷயர் ஆகியோர் 5 கி.மீ தூரம் ஓட்டினர். மேலும் இக்கார் விரைவில் ரோட்டில் ஓடத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## உரையாடலினால் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க புதிய கருவி

கைபேசியில்பேசிகொண்டே வாகனம் செலுத்தும் போது கவனம் சிதறி விபத்துகள் ஏற்படுகின்றன. என்றாலும், கைபேசியில் பேசிக்கொண்டு வாகனம் செலுத்துவதும், சிலர் எஸ்.எம்.எஸ். அனுப்புவதும் வழக்கமாக உள்ளது. இதனைத் தடுக்கும் விதமாக, அமெரிக்காவின் எவர்ஜீனியா மாநிலத்தில் உள்ள நிறுவனம் ஒரு புதிய கருவியை கண்டுபிடித்து அறிமுகம் செய்துள்ளது. இந்த கருவி வாகனத்தின் முன்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும். "ஓரிகோ சேப்" எனப்படும் இந்தக் கருவியில் செலுத்துநர் தனது கைபேசியைப் பொருத்தினால் என்ஜின் இயங்கத் தொடங்கும். வண்டி ஓடிக்கொண்டிருக்கும்போது, செலுத்துநர் புளுடூத் மூலம் கைபேசியில் வரக்கூடிய அழைப்புகளை ஏற்று பேசலாம்.






ஆனால், திரும்ப அழைப்புக்களை ஏற்படுத்தவோ அல்லது எடுத்து எஸ்.எம்.எஸ். அனுப்பவோ முடியாது. அப்படி எடுத்தால், அதில் உள்ள அலா ரம் இயங்கி அதனுடைய செயல்பாடுகளைக் கண்காணிப் பவருக்குத் தகவலாக தெரி வித்து விடும். வண்டியும் நின்று விடும்.

கண்காணிப்பாளர் வந்து திறந்தால் மட்டுமே மறுபடி வாகனத்தை இயக்க முடியும். வண்டி நின்றிருக்கும்போது இந்தக் கருவி செயற்படாது. அப் போதுதான் ஓட்டுநர் தனது போனை உபயோகிக்க முடியும்.



## நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்

உலகிலுள்ள சில தொழில் நுட்ப நிறுவனங்களின் பெயர்கள் எப்படி தோற்றம் பெற்றன, அதன் பின்னணி என்ன என்ற விபரம் வருமாறு.

**அமேசன்:** [Amazon]

இந்நிறுவனத்தின் பெயர், அமேசன் நதியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அந்நதியை போலவே தற்பொழுது இணையவழி சில்லறை வணிகத்தில் அமேசன், உலகம் முழுவதிலும் விரிவடைந்துள்ளது.

**டுவிட்டர்:** [Twitter]

சமூக வலைத்தளங்களில் மிக முக்கிய இடத்திலுள்ள டுவிட்டர் தளத்தின் பெயர் சற்றே வித்யாசமானது. டுவிட்டர் என்ற பெயருக்கு "வெற்றியாளர்" என்று பொருள் சொல்லப்படுகிறது.

**பைடு:** [Baidu]

இந்தப் பெயரானது 800 ஆண்டுகால பழைமையான சீன கவிதையிலிருந்து பெறப்பட்டது.

**கிண்டில்:** [Amazon Kindle]

கிண்டில் என்பது அமேசன் நிறுவனத்தின் தயாரிப்பு. கிண்டில் என்றால், விளக்கிற்கு ஒளியேற்றுவது என்பதே பொருள். இந்த கிண்டில் சாதனம் மூலமாக இ-புக்களை படிப்பது மிகவும் எளிது.

**இன்ஸ்டாகிராம்:** [Instagram]

இன்ஸ்டாகிராம் என்பதற்கு "இங்கேயே, இப்பொழுதே பதிவு செய்தல்' என்பதே பொருள்.

**நொக்கியா:** [Nokia]

நொக்கியன்விர்தா என்ற நதியின் பெயரின் பாதியே நொக்கியா என்றழைக்கப்படுகிறது.

**ஈபே:** [EBay]

ஈபே நிறுவனத்தின் முழு பெயர் "எக்கோ பே தொழில்நுட்ப குழு" என்பதாகும். இதை சுருக்க நினைத்தவர்கள், எக்கோ பே என்று பெயரிட்டார்கள். அதை ஏற்கெனவே ஒரு நிறுவனம் வைத்திருப்பதால், ஈபே.காம் என்று இன்னும் சுருக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிப்பதால் வடக்கு மக்களுக்கு என்ன நன்மை ஏற்படும்?

## பாதுகாப்பு செயலர் கேள்வி

(கொழும்பு)

போர்க்குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிப்பதன் மூலம் வடக்கு மக்களுக்கு என்ன பயன் கிடைக்கும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு போர்க் குற்றப் பிரச்சினை கிடையாது எனவும் வேறு பிரச்சினைகளே அவர்களுக்குக் காணப்படுகின்றன.

வடக்கு தமிழ் மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்க சர்வதேச சமூகத்தின் தலையீடு அவசியம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி வருகின்றது. இதுவே அவர்களது நிகழ்ச்சி நிரலாக அமைந்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை கிடைக்கப் போகின்றது. தமிழ் மக்களுக்கு எவ்வாறு தொழில் வாய்ப்புக்களை வழங்குவது என்பது குறித்தே கூட்டமைப்பு கவனம் செலுத்த வேண்டும். வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தல், வீதி அபிவிருத்தி போன்ற பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகள் வடக்கின் பல குடும்பங்களைச் சேர்ந்தவர்களை பலவந்தமான முறையில் போரில் ஈடுபடுத்தியிருந்தனர்.

இதன் காரணமாக இவ்வாறான குடும்பங்களை பராமரிப்பதில் பெரும் நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளது. தமிழக மீனவர்களின் அத்துமீறல்களினால் வடக்கு மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் தமிழகத்துடன் எவ்வித தொடர்புகளையும் பேணும் திட்டமில்லை. தமிழகத்தில் எமது இலங்கையர்களுக்கு பெரும் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எதிர்காலத்தில் தமிழகத்திலிருந்து வரும் தமிழர்களுக்கு சட்டங்களின் அடிப்படையில் உயர் தண்டனைகள் விதிக்கப்படும். மனித நேயம் மற்றும் கருணை இல்லையென எங்கள் மீது புலிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

உண்மையில் மனிதநேயமும் கருணையும் அவர்களிடம் கிடையாது. எங்களது மனித நேயத்தினை அவர்கள் துஷ்பிரயோகம் செய்கின்றனர். பௌத்த பிக்குகளுக்கும் இலங்கையர்களுக்கும் எதிராக தாக்குதல்கள் நடத்தும் தமிழக புலி ஆதரவாளர்களை கைது செய்ய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை வடக்கு கொடிகாமம் ஆலடிப் புலம் ஸ்ரீ நடராஜ முருக மூர்த்தி தேவாஸ்தான மஹாகும் பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 8 மணி க்கு நடைபெறவுள்ளது.

முதல் நாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 8 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# மரணமான பெண் குறித்து லெபனான் விசாரணை

(கொழும்பு)

லெபனானில் பொலித்தீன் பையொன்றில் சுற்றப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட இலங்கை பணிப்பெண் குறித்த விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

லெபனானில் உள்ள இலங்கை தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அத்தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

கடந்த 4 ஆம் திகதி குப்பைத்தொட்டி ஒன்றுக்கு அருகில் இந்த சடலம் மீட்கப்பட்டிருந்தது.

சிலாபம் பகுதியைச் சேர்ந்த அவர் குறித்த விசாரணைகளை லெபனான், பொலிஸாரினால் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பௌத்த மாணவன் தாக்கப்பட்டதை கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தமிழ் நாட்டிற்கு பட்டப்படிப்புக்கு சென்றிருந்த பௌத்த மாணவன் தாக்கப்பட்டமை மற்றும் அண்மையில் சுற்றுலா சென்றிருந்த சிங்களவர்கள் தாக்கப்பட்டமை என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கொழும்பில் அமைந்துள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்துக்கு முன்பாக கண்டனப் பேரணியொன்று இடம்பெற்றது. இப்பேரணி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்பேரணியை அனைத்து பல்கலைக் கழக பௌத்த மாணவர்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. பேரணி அமைதியாக இடம்பெற்றதுடன் பேரணியில் கலந்து கொண்டவர்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பதாகைகள் ஏந்தி நின்றனர்.

இந்திய உயர்ஸ்தானிகரை தாங்கள் சந்தித்த பேரணியின் ஏற்பாட்டாளரான தம்புல்லாவே சந்தனந்த ரத்ன இரு அரசாங்கங்களினாலும் அரசியல் செயற்பாடுகளுக்காக அப்பாவிகள் மீது அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவது அங்கீகரிக்க முடியாது என்றும் இலங்கையில் இருந்து செல்லும் மக்களையும் யாத்திரிகர்கள் மற்றும் மாணவர்களையும் பாதுகாக்க இந்திய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினார்.

தங்களது கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர் உரிய நடவடிக்கையெடுப்பதாக உறுதியளித்ததாகவும் அவர் கூறினார். (அ-2)

# சைவப் புலவர் தேர்வு எதிர்வரும் மே மாதம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் சைவப் புலவர், இளம் சைவப் புலவர் தேர்வுகள் எதிர்வரும் மே மாதம் இறுதி வாரத்தில் நடத்தவப்படவுள்ளதாக இச் சங்க தேர்வுச் செயலாளர் சைவப் புலவர் சு.செல்லத்துரை தெரிவித்துள்ளார்.

இத்தேர்வுகள் கொழும்பு, மட்டக்ளப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறும்.

இதற்கான இலவச வழிகாட்டல் வகுப்புகள் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மட்டக்களப்பு நாவற்குடா இந்து சலாசார மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி தேர்வுகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்கள் தேவையானோர் 01127 39238 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி விபரங்களை பெற்றுக் கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சுற்றுலாத்துறை மேம்படுவதற்கு ஹோட்டல் அமைத்தால் போதாது

## பிரிட்டன் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மாத்தறை தங்காலை பகுதியில் வைத்து கொலை செய்யப்பட்ட பிரித்தானியர் குறித்து ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சம்பம் தொடர்பிலான விசாரணை நிலைமைகளை ஆராய்வதற்காக அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் டன்சக் இலங்கை வந்திருந்தார்.

இந்த நிலையில் இலங்கை இலங்கையில் பெற்ற விபரங்களை அவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இதன்போது உரையாற்றிய அவர்,

இலங்கையை பிரித்தானியா சிறந்த சுற்றுலா நாடாக அறிவித்திருந்த போதும் பிரித்தானிய பிரஜைகளுக்கு அங்குள்ள ஆபத்துக்கள் குறித்து தெரிந்துக் கொள்ள வாய்ப்பில்லை என்று தெரிவித்தார்.

இலங்கையின் சுற்றுலாத்துறையில் சீனா பாரிய முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

எனினும் ஹோட்டல்களை நிர்மாணிப்பதால் மாத்திரம் சிறந்த சுற்றுலாத்துறையை நடத்த முடியாது என்று தெரிவித்த அவர் இதற்காக நாட்டில் ஜனநாயகத்துக்கு முக்கிய இடம் வழங்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார். (அ-2)

# தமிழ்பெண் சிப்பாய்கள் நேற்று முதல் கடமையில்

(கிளிநொச்சி)

தமிழ்பெண் இராணுவச் சிப்பாய்கள் நேற்று தொடக்கம் கடமையில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 95 வடக்கு தமிழ் பெண்களே இவ்வாறு இராணுவச் சிப்பாய்களாக கடமையாற்றவுள்ளனர். இவர்கள் அனைவரும் கிளிநொச்சியில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

நான்கு மாதங்கள் இராணுவப் பயிற்சியை பூர்த்தி செய்த குறித்த வடக்கு தமிழ் யுவதிகள் தற்போது இராணுவ வீராங்கனைகளாகப் பரிணாமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சியை பூர்த்தி செய்த குறித்த பெண் வீராங்கனைகளின் நிகழ்வு கிளிநொச்சி பாதுகாப்பு தலைமையகத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக பிரிகேடியர் ரத்னசிங்கம் பங்கேற்பார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-2)



வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மகளிருக்கான துடுப்பாட்ட இறுதிச் சுற்றுப் போட்டி அண்மையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரிக்கப்பட்ட வடமராட்சி மத்திய மகளிர் அணியினரை இரண்டாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யோகர்சுவாமிகள் ஒரு சுருக்க வரலாறு

**தவத்திரு சிவயோகர் சுவாமிகளின் 49 ஆவது குருபூசை நாள் நாளை சனிக்கிழமை கொண்டாடப்படுகிறது. அதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

ஆறுமுக நாவலர் பெருக்கெடுத்தோடச் செய்த சைவ சார வெள்ளம் இச் சிவ பூமியை நன்றாக பண்படுத்தியது. சிவ மணம் கமழும் இந்தப் பண்பட்ட பூமியிலே புகழ்பெற்ற நல்லை தேரடியில் செல்லப்பமூர்த்தம் வீற்றிருந்து ஒரு ஞான சுடர் விளக்கை ஏற்றி வைத்தது. அந்த ஞானச்சுடர் விளக்கே யோகர் சுவாமிகள்.

**இளமை**

இவர் 1972 ஆம் ஆண்டு புகழ்பெற்ற முருகத் தலமான மாவட்டபுரத்தில் அவதரித்தார். அவரது இயற்பெயர் சதாசிவம் என்பர். அவர் இளமையிலேயே தாயிலியானார். தந்தையாரும் தொலை தூரத்தில் உள்ள மஸ்கெலியாவில் வியாபாரம் செய்து வந்தார். கொழும்புத்துறையூரில் இருந்த மாமியாரின் வீட்டிலேயே அவர் வளர வேண்டியதாயிற்று. அவர் செம்பட்டிஸ் கல்லூரியில் கல்வி பயின்றார். பின்னாளில் தன்னை நாடி வந்த ஆங்கிலேயருக்கும் உபதேசம் செய்தற்குரிய ஆங்கில மொழி அறிவு அக் கல்லூரியில் கிடைத்தது. கல்லூரி படிப்பு முடிந்ததும் கிளிநொச்சியில் உத்தியோகம் புரிந்தார். அவர் தம் உத்தியோகம் ஓய்வு மிகுந்ததாய் இருந்தது. அந்த ஓய்வு நேரத்தில் வட மொழியிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள உண்மை நூல்களை ஓதி உணர்ந்தனர். குயில் கூவ மயில் ஆடும் அமைதியும் இனிமையும் மிகுந்த அவ்வாரணி சூழலில் தியானத்தில் அமர்ந்தும் உண்மை உணர முயன்றார்.

**குருகுல வாசம்**

இந்நாட்களிலேதான் அவருக்கு நல்லை தேரடியில் வீற்றிருந்த செல்லப்ப தேசிகரின் உறவு வாய்த்தது. செல்லப்ப தேசிகர் அவரை கண்ணுற்ற மாத்திரத்தே ஆரடா நீ என அதட்டினார். சற்று நேரத்தில் சிரித்த முகத்துடன் நல்லதப்பா வா உன்னைப் போல ஆளைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று அருளினார். இது சதாசிவனாரது குருகுல வாசத்துக்கு மங்களமானதொரு நல்வரவு கூறு தலாய் அமைந்தது. சில நாட்களில் சதாசிவனார் உத்தியோகம், உற்றார், உறவினர் அனைத்தையும் துறந்து நல்லைத் தேரடியிலே குருபரனுடன் சகவாசம் புரியலானார்.

அவர் தம் குருகுல வாசம் நூதனமாய் இருந்தது. அவர் குருவிற்கு பணிவிடை செய்வதற்கும் குரு அனுமதிக்கவில்லை. ஆசானை சால அன்புடன் வழிபடச் சென்றால் அவர் காலன் என்ன கறுத்து சீறுவார். குருவின் முன்பு பணிவாயிருந்து உபதேசம் கேட்கவும் முடியவில்லை. அவரின் பின்புறம் இருந்தே பிதற்றல்கள் ஊடே வந்த மணிமொழிகளை மனதில் பதிக்க வேண்டியதாயிற்று.

அவ்வாறு அவர் கேட்டு மனதில் பதித்த மெய் மொழிகள் பயிலும் தமிழிழமைந்த வேதாகமசாரமானவையாயிருந்தன. குருபரன் அருளிய

**ஒரு பொல்லாப்பும் இல்லை**
**எப்பவோ முடிந்த காரியம்**
**நாம் அறியோம்**
**முழுதும் உண்மை**

என்னும் மகாவாக்கியங்கள் மோனந்திகழும் சிவயோகியராலும் முற்றும் அறிய முடியாதனவாய் இருந்தன.


**ஏதுமொன்றற நில்**
**இருந்து பார்**
**அயலுனக்கில்லை**

ஆதிய சின்மொழிகளும் சிந்தித்து சிந்தித்து சிந்தனா திதனாகிச் சும்மா இருக்கும் சுகத்தில் மூழ்கி இருக்கச் செய்ய வல்லனவாயிருந்தன.

**முச்சந்தி குப்பையிலே முடங்கி கிடந்திடு**
**தச்சன் கட்டா வீட்டிலே தாவு பரி கட்டு**

ஆதிய யோக மொழிகள் பாவலர் நாவலரையும் பதறச் செய்யும் பரிதர்சைகளாய் இருந்தன. இவ் உபதேச மொழிகளுக்கு இலக்கியமாக செல்லப்ப மூர்த்தமே விளங்கிற்று. ஓவியம் போன்றிருந்த அவரது இருப்பு எல்லாம் நமோன நிறைவே என்பதை விளங்கிற்று. ஒரு பொல்லாப்பும் இல்லை என்னும் பெரும் பெயரை அவர் தம் இன்ப சாகர மோனம் என்னும் வடிவம் உணர்த்திற்று. உபதேச மொழிகளாலும் தமது ஞானத்தின் திருவுருவாலும் அன்றிச் செயன்முறையாலும் செல்லப்ப தேசிகர் ஞானம் உணர்த்தினர். ஏறக்குறைய பன்னிரு வருட காலம் இந்த குரு சீட முறையிலான ஞான வித்தை பயிற்றுதல் நிகழ்ந்ததென்பர். இந்த ஞானத்தை பயிற்றுதலின் ஓரங்கமாக ஒரு மண்டல காலம் நல்லைத் தேர் தூண் அடியிலிருந்து தவமியற்றும் கருமம் நிகழ்ந்தது.

தவ முடிவில் கதிர்காம யாத்திரைக் காலம் அமைந்தது. கதிர்காம யாத்திரையை முடித்துக் கொண்டு மாய சக்திகள் எதனாலும் கட்டுப்படாத அசுவமேத குதிரையாக நல்லைத் தேரடியில் வந்து சேர்ந்தார் யோகமுனி. யாத்திரைக் காலத்திலே சதாசிவனை தேரடியில் காண உறவினர் செல்ல தேசிகரிடம் சென்று விசாரித்தனர் எனவும் செல்லப்பர் அவன் செத்துவிட்டான் என கூறினர் எனவும் செல்லப்பர் வாக்கின் பொருளறியாத உறவினர், கருமாதிகள் எல்லாம் செய்து முடித்தனர் எனவும் மீண்டும் சதாசிவனை கண்ட உறவினர் செல்லப்பரிடம் சென்று தன் மனக்குறையைக் கூறி முறையிட்டனர் என்றும் அப்பொழுதும் செல்லப்பர் தான் பொய் சொல்வதில்லை. அவன் செத்தே போயினான் என்று சொல்லினர் எனவும் கூறுவார். இந்த நாடகத்தின் பொருள் யோகர் முனிவர் மாற்றி பிறந்து விட்டார் என்பதே ஆகும்.



ஞான வித்தையின் நுட்பங்களை எல்லாம் குருபரனின் சக வாசத்தாலும் தவத்தாலும் பரிவிராக (கதிர்காம யாத்திறை) வாழ்வாலும் முழுமையாக உணர்ந்து கொண்ட சீடரை தீர்க்கை வைத்தாளத் தேசிதிருவுளம் பற்றினார். இத்தீக்கையின் ஆரம்பமாகப் பன்றித் தலைச்சியம்மன் கோயிலுக்கு பங்குனி தலைத்திங்கள் அன்று சீடரை அழைத்துச் சென்று பொங்கலிட்டார். இரண்டாம் திங்கள் அன்று கந்தன் திருமுன்றில் ஒரு பொல்லாப்பும் இல்லை என்னும் ஓசையோடு உற்று நோக்கி தன் கரத்தால் தொட்டு தலைத் தளத்தைக் காட்டி சும்மா இருக்கும் சூட்சத்தில் மாற்றி வைத்தார். ஒரு வாக்கு, ஒரு நோக்கு ஒரு தொடுகை ஒரு கைக்காட்டு என்பவற்றை தினை அளவு போதினிற் புரிந்த இந்த ஞானவதியான தீக்கையால் தானாக செய்திவிட்டார் செல்லப்பன் எனும் தீர்க்கமான குரு சதாசிவன் யோகர் சுவாமிகளாய் மலர்ந்தார். ஆசான் அருளால் ஆசான் ஆகினார். (நாளை வளரும்)

**சிவதொண்டன் நிலையம்,**
**யாழ்ப்பாணம்.**

## பங்களாதேஷ் ஜனாதிபதி காலமானார்



பங்களாதேஷ் ஜனாதிபதி சில்லூர் ரஹ்மான் தனது 84 ஆவது வயதில் சிங்கப் பூரில் காலமானார்.

சிறுநீரகக் கோளாறு மற்றும் சுவாசப்பிரச்சினைக்கு இவர் சிங்கப்பூர் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே நேற்று முன்தினம் காலமானார்.

ரஹ்மான் 50 ஆண்டுகளுக்கு மேல் செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தென்கொரிய வான்பரப்பில் அமெரிக்க விமானங்கள் பறப்பு

வடகொரியாவுடன் போர் பதற்றம் நிலவும் நிலையில் தென்கொரியா பகுதியில் அணுகுண்டு வீச்சு போர் விமானத்தை பறக்கச் செய்து அமெரிக்கா பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. உலக நாடுகளின் எச்சரிக்கையை பொருட்படுத்தாமல் வடகொரியா சமீபத்தில் 3 ஆவது முறையாக அணுகுண்டு சோதனையை நடத்தியது. இதையடுத்து அந்நாட்டின் மீது ஐ.நா. பொருளாதார தடை விதித்தது.

இதனால் ஆத்திரமடைந்த வடகொரியா, தென்கொரியா மற்றும் அமெரிக்கா மீது அணுகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்துவோம் என்று எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் தென்கொரியாவுடன் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டு வரும் அமெரிக்கா கடந்த 8 ஆம் திகதி குவாம் நகரில் உள்ள ஆண்டர்சன் விமான தளத்திலிருந்து பி 52 என்ற அணுகுண்டு வீச்சு விமானத்தை பறக்க விட்டது.

தொடர்ந்து நேற்றுமுன்தினம் இந்த வகை விமானம் பறக்க விடப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது. பயிற்சியின் ஒரு பகுதியாக இந்த விமானங்கள் பறக்க விடப்பட்டதாக அமெரிக்க இராணுவ தலைமையிடமான பென்டகனின் செய்தி தொடர்பாளர் ஜார்ஜ் லிட்டில் தெரிவித்துள்ளார். (அ-2)

## கடத்தப்பட்டவரின் தலை துண்டிப்பு

அல்கொய்தா போராளிக்குழுக்களால் கடத்தப்பட்ட பிரான்ஸ் சுற்றுலாப்பயணி தலை துண்டித்து கொலை செய்யப்பட்டதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.மாலி நாட்டில் இயங்கி வரும் அல்கொய்தா போராளிக்குழு கடந்த 2011 ஆம் ஆண்டு மாலி நாட்டின் ஹாம்போரி நகர் விடுதியில் தங்கியிருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 2 சுற்றுலா பயணிகளை கடத்திச் சென்றனர்.

அவர்களை பிரெஞ்சு உளவாளிகள் என கருதிய தீவிரவாதிகள் தனியறையில் அடைத்து வைத்து சித்திரவதை செய்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த 10 ஆம் திகதி அவர்களில் ஒருவரான பிலிப் வெர்டான் என்பவரின் தலையை வெட்டிக்கொன்று விட்டதாக வட ஆபிரிக்க அல்கொய்தா இயக்கத்தின் செய்தி தொடர்பாளர் அறிவித்துள்ளார். (அ-5)

## காணாமல் போனவர்களை கண்டுபிடிக்க புதிய கொள்கை பிரிட்டன் வகுத்தது

பிரிட்டனில் காணாமல் போனவர்களைக் குறிப்பாக குழந்தைகளைக் கண்டுபிடிக்க அரசு புதிய கொள்கை ஒன்றை பொலிஸ் துறைக்காக வகுத்துள்ளது.

இப்புதிய கொள்கையில் தொலைந்து போனவர்கள் யார் மற்றும் காணாமல் போனவர்கள் யார் என்பவற்றிற்குரிய விளக்கம் இப்புதிய கொள்கையில் முன்பு இருந்ததை விட வித்தியாசமாகவும் தெளிவாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அரசு வெளியிட்ட அறிக்கையில்,

அடுத்த மாதம் முதல் இப்புதிய கொள்கை நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் இத்திட்டம் முதலில் மூன்று பொலிஸ் பிரிவுகளுக்கு மட்டுமே வகுக்கப்படும் என்றும் பின்னர் ஏனைய பிரிவுகளில் தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 3 இலட்சத்து 27 ஆயிரம் பேர் காணாமல் போகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## முஷாரப் மீதான வழக்கு ஒத்திவைப்பு

முஷாரப் தேர்தலில் போட்டியிட தடை கோரிய வழக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு பாகிஸ்தானில் பொதுத் தேர் தல் நடக்கிறது.2009 ஆம் ஆண்டு நாட்டை விட்டு வெளியேறி அந்நாட்டு முன்னாள் ஜனா திபதி முஷாரப், அனைத்து பாகிஸ்தான் கட்சி சார்பில் மீண்டும் நாடு திரும்பியதும் போட்டியிட முடிவு செய்துள்ளார்.

இதனை எதிர்த்து முகமது ஹயாத் என்ப வர் லாகூர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார். வழக்கினை விசாரித்த நீதிபதி நஸீர் சையத் ஷேக் திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தார். (அ-2)

## அமெரிக்க ஜனாதிபதி இஸ்ரேல் பயணமானார்

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா,3நாட்கள் அரசு முறைப்பயணமாக ஜெருசலேமிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஒபாமா நேற்றைய தினம் இஸ்ரேலுக்கு மேற்கொண்டுள்ள முதல் அதிகாரபூர்வ பயணம் இதுவாக அமைந்துள்ளது.

இந்தப் பயணத்தின் போது அவர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேட்டநன்யாஹுவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதோடு பாலஸ்தீன ஜனாதிபதி முகம்மது அப்பாஸையும் மேற்கு கரை நகரில் சந்திக்கவுள்ளார்.

இஸ்ரேலும் பாலஸ்தீனமும் மோதல் நிலைமையை முடிவுக்கு கொண்டு வர பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று ஒபாமா இரு தரப்பினரிடமும் வலியுறுத்துவார் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறினர்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் சந்தித்து ஒபாமா பேச்சுவார்த்தை நடத்துகிற போது ஈரான் அணுகுண்டு பெறுவதை தடுப்பது குறித்து மறு உறுதி செய்ய வேண்டும் என்று கோருவார்.

சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டுப் போரை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் அவர் பெஞ்சமினுடன் விவாதிப்பார் எனத் தெரிய வருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்கள் கோருவது கண்ணியமான வாழ்வை மட்டுமே

## இதை வழங்க இந்தியாவால் மட்டுமே முடியும்; தினமணி ஆசிரியர் தலையங்கம் சுட்டிக்காட்டு

(சென்னை)

**இலங்கையில் கால் நூற்றாண்டு போரினால் சலிப்புற்று இருக்கும் அப்பாவி தமிழர்களின் எதிர்பார்ப்பு கல்வி, மருத்துவம், உறைவிடம், இராணுவம் வெளியேறி அமைதிச் சூழல், தொழில் தொடங்க பொருளாதார உதவிகள் போன்றவையாகத்தான் இருக்க முடியும். இலங்கை அரசை எதிர்த்து போராடும் மனத் துணிவும் தலைமையும் அங்கே இல்லை. இன்னொரு பிரபாகரன் அங்கே தோன்றக்கூடும். ஆனால், அதற்கு இன்னும் காலம் உண்டு. இப்போதைய அவர்களது தேவை அமைதியான வாழ்க்கைதான் என தினமணியின் நேற்றைய ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

மத்திய அரசுக்கு ஆபத்து இல்லை என்பது உறுதியாகத் தெரிந்துவிட்டதாலும் இந்த விவகாரத்தில் மத்திய அரசு எந்த நிலைப்பாட்டை மேற்கொண்டாலும் ஆதரிப்பது என திரிணாமூல் காங்கிரஸ் முன்வந்திருப்பதாலும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் பெரும்பான்மையை யாரும் கேள்வி கேட்கப் போவதில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் போவதில்லை.

மத்திய அரசு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப் போகும் தீர்மானம் எப்படி அமைய வேண்டும் என்பது கடந்த 19 ஆம் திகதி இரவு காங்கிரஸ் கட்சியின் உயர் நிலைக் குழுக் கூட்டத்தில் சோனியா காந்தி பேசிய வார்த்தைகளிலேயே வெளிப்பட்டுள்ளது. அவர் கூறியிருப்பது இதைத்தான்.

இலங்கைத் தமிழர்களின் துயரம் எங்கள் இதயத்தை தொடுகிறது, அவர்களது சமவுரிமை, சட்டப்படியான பாதுகாப்பு ஆகியவற்றில் இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி காலம் முதலாகவே உறுதியாக இருந்துள்ளோம். அவர்களுக்கு உரித்தான அரசியல் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்படுவதுவேதனைஅளிக்கிறது.

அப்பாவி மக்கள் மீதும் குழந்தைகள் மீதும் நிகழ்த்தப்பட்ட சொல்லொணா அட்டூழியங்கள் பற்றிய செய்திகள் குறிப்பாக 2009 இல் இறுதிப் போரின் போது நிகழ்த்தப்பட்ட கொடுமைகளைக் கண்டு வேதனையடைந்தோம். ஆகவேதான் சுதந்திரமான நம்பத் தகுந்த விசாரணையைக் கோருகிறோம்.

இதே வார்த்தைகள் அச்சு பிறழாமல் தீர்மானமாக நிறைவேற்றப்படும் என்று நம்பலாம். சோனியா காந்தியின் உரையிலிருக்கும் சுதந்திரமான நம்பத்தகுந்த விசாரணை என்பதை சர்வதேச விசாரணை என்று மாற்றப்படுவதும் அதே போன்று 2009 இல் நிகழ்த்தப்பட்ட சொல்லொணா அட்டூழியங்கள் என்பது இனப்படுகொலை என்று மாற்றப்படுவதும் இருக்காது. இந்தத் தீர்மானமும் அமெரிக்க ஐ.நா மனிதவுரிமைக் குழுமத்தில் அளித்த இறுதித் தீர்மானம் போல நீர்த்துப் போனது என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்வாறு வீரியம் இல்லாத் தீர்மானத்தை நிறைவேற்றக் காரணம் நிச்சயமாக தி.மு.கவை மீண்டும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. காங்கிரஸ் கட்சியும் தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளுடன் கூட்டணி அமைத்து அடுத்த ஆண்டுமக்களவைத்தேர்தலைச்சந்தித்தாக வேண்டும் என்கிற நெருக்கடிதான் காரணமாக இருக்க முடியும்.

இத்தனை நாட்களாக இந்திய அரசுக்கு கோரிக்கை விடுத்ததைக் காட்டிலும் நேரடியாக அமெரிக்காவுக்கே கோரிக்கை வைத்திருக்கலாம். ஒபாமாவைச் சந்தித்துப் பேசியிருக்கலாம். ஐ.நா மனிதவுரிமைக் குழுமத்தின் உறுப்பு நாடுகளுக்குச் சென்று அந்நாட்டுத் தலைவர்களுடன் இலங்கையின் மனிதவுரிமை மீறல் குறித்துப் பேசி ஆதரவு திரட்டியிருக்கலாம். விரும்பும் திருத்தம் செய்யக்கோரியிருக்கலாம். ஆனால், அத்தகைய பெரு முயற்சிகளை வாய்ப்பிருந்தும் செய்யவில்லை. இங்குள்ள அரசியல் கட்சிகள் இதில் தி.மு.கவை மட்டும் சொல்லிக் குற்றமில்லை. யாரும் செய்யவில்லை.

அமெரிக்கத் தீர்மானம் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றவுடன் அதற்கு இந்தியா ஆதரவாக வாக்களித்ததுடன் இப்போதைய மாணவர் போராட்டங்கள் அடங்கிப் போகக் கூடும். ஆனால், ஐ.நா மன்றத்தில் நிறைவேறும் தீர்மானங்களுக்கு அப்பாற்பட்டு இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் செய்ய வேண்டிய கடப்பாடுகள் உள்ளன.

அதனை உறுதிப்படுத்துவதில் தான் தமிழக அரசியல் கட்சிகள் தற்போது கொண்டுவர இருக்கும் நாடாளுமன்றத் தீர்மானத்தின் போது முனைப்புக் காட்ட வேண்டும்.

இலங்கைக் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க அனுமதிக்கும் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவது, இலங்கைத் தமிழர்களுக்கான மீள்குடியமர்வுப் பணிகளை இந்திய அரசின் மேற்பார்வையில் நடத்தவுமான ஒப்பந்தங்களை ஏற்படுத்துவது இன்றைய அவசியத் தேவை.


இலங்கையில் கடைசிப் போருக்குப் பின்னும் மிச்சமாக அந்த மண்ணிலேயே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கை தங்களுக்குத் தாய் மண்ணில் கண்ணியமான வாழ்க்கை அமைய வேண்டும் என்பதுதான். வெளிநாடு வாழ் இலங்கைத் தமிழர்கள் கேட்பதைப் போல அவர்களால் தமிழீழம் ராஜபக்ஷவுக்கு தண்டனை என்று வெளிப்படையாகப் பேச முடியாது.

ஈழத்தில் கால் நூற்றாண்டுப் போரினால் சலிப்புற்று இருக்கும் அப்பாவித் தமிழர்களின் எதிர்பார்ப்பு கல்வி, மருத்துவம், உறைவிடம், இராணுவம் வெளியேறிய அமைதிச் சூழல், தொழில் தொடங்க பொருளாதார உதவிகள் போன்றவையாகத்தான் இருக்க முடியும்.

இலங்கை அரசை எதிர்த்துப் போராடும் மனத்துணிவும் தலைமையும் அங்கே இல்லை. இன்னொரு பிரபாகரன் அங்கே தோன்றக்கூடும். ஆனால், அதற்கு இன்னும் காலம் உண்டு. இப்போதைய அவர்களது தேவை அமைதியான வாழ்க்கைதான். இத்தகைய வாழ்க்கையை நிச்சயமாக ராஜபக்ஷ அரசு உறுதிப்படுத்தாது. அங்கே மக்கள் பயத்திலும் பீதியிலும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

முள் வேலிகள் அகற்றப்பட்டு விட்டனவே தவிர ஒவ்வொரு தெரு மூலையிலும் துப்பாக்கியுடன் இராணுவ வீரர்கள் நின்று கொண்டு தான் இருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்ற இந்திய அரசால், இந்திய அரசு இலங்கைக்குத் தரும் தலையீட்டால் தடுக்க முடியும், மாற்ற முடியும். அதற்குத்தான் தமிழகத்தின் அரசியல் கட்சிகள் நடுவண் அரசை வற்புறுத்த வேண்டும். கேட்டால் கேட்ட வரம் கிடைக்கும் நேரமிது. (அ)

பாரதச் செய்தி



இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தி கிறிஸ்தவ அமைப்பினர் சென்னை சாந்தோமில் போராட்டத்தில் ஈடுபடுவதை படங்களில் காணலாம்.

## தோழமை கட்சிகளுடன் அணி சேரப் போவதில்லை

### கருணாநிதி கருத்து


ராஜபக்ஷ அரசுக்கு எதிரான தீர்மானத்தை நீர்த்துப் போக முயற்சிக்கும் இலங்கை அரசுக்கு உதவுவதிலேயே மத்திய அரசு குறியாக இருந்ததால் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்து தி.மு.க விலகுவது தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது என தி.மு.க. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியுடன் விலகிய பின்பு தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆங்கில நாளிதழுக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த முடிவை அறிவிப்பதற்கு முந்தைய நாள் என்னை சந்திப்பதற்காக டில்லியில் இருந்து 3 மத்திய மந்திரிகள் சென்னைக்கு வந்தபோதிலும் இலங்கையில் போர் காலத்தில் நிகழ்ந்த அத்துமீறல்கள் தொடர்பாக காலவரையறைக்குட்பட்ட விசாரணை ஐ.நா. மனிதவுரிமை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தில் இனப்படுகொலை என்ற வாசகத்தை இணைப்பது போன்றவை தொடர்பான எனது கோரிக்கைகளுக்கு அவர்களிடம் தெளிவான முடிவு ஏதுமில்லை.

தற்போதோ பின்னரோ பாராளுமன்ற தேர்தல் எப்போது நடைபெற்றாலும் எங்கள் கட்சி தேர்தலை சந்திக்க தயாராக உள்ளது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியை கவிழ்க்க தோழமை கட்சிகளுடன் நாங்கள் அணிசேர மாட்டோம். பாராளுமன்ற தேர்தலை கருத்தில் வைத்து மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை நாங்கள் விலக்கிக் கொள்ளவில்லை. எனவே, மூன்றாம் அணி அமைப்பது பற்றிய கேள்விக்கு இடமில்லை. தற்போது இலங்கை தமிழர்களின் நல்வாழ்வு பற்றி மட்டும் பேசுவோம். கூட்டணிகளை பற்றி பின்னர் பேசலாம். என்றார். (அ)

## மு.க.ஸ்டாலின் வீட்டில் சி.பி.ஐ. அதிரடிச் சோதனை



தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின் வீட்டில் சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று அதிகாலை 3 மணி முதல் சோதனை நடத்தினர். சென்னை தேனாம்பேட்டையில் இருக்கும் அவரது வீட்டில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது.

சி.பி.ஐ. சோதனைநடைபெறுவதை தி.மு.க. தரப்பும் சி.பி.ஐ. அதிகாரிகள் வட்டாரமும் உறுதி செய்துள்ளது. திடீர் சோதனைக்கான காரணம் இன்னும் சரியாக தெரியவில்லை.

சி.பி.ஐ. சோதனை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகாத நிலையிலும் உதயநிதி ஸ்டாலின் வெளிநாட்டில்இருந்துஇறக்குமதிசெய்த சொகுசுகார் தொடர்பாக இந்த சோதனை நடைபெறுவதாக கூறப்படுகிறது.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட காருக்கு முறையான ஆவணம் இருக்கிறதா, சரியான தொகை செலுத்தப்பட்டதா? என அதிகாரிகள் சோதனை மேற்கொள்வதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, தமது வீட்டில் சி.பி.ஐ. சோதனை நடத்தியிருப்பதை சட்டப்படி எதிர்கொள்வோம் என்று தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். ஆனால், இது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று தி.மு.கவின் மூத்த தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த சோதனை பற்றி கருத்து தெரிவித்த மு.க. ஸ்டாலின் எந்த வழக்கானாலும் இதை நாங்கள் சட்டப்படி சந்திப்போம் என்றார். இருப்பினும் தி.மு.கவின் மூத்த தலைவர்கள் பலரும் இது ஒரு அரசியல் பழி வாங்கும் நடவடிக்கையே என்று குற்றம் சாட்டியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் செய்யும் தவறுகள் கூட புனிதமாகும். அதை நீங்கள் ஒப்புக் கொள்ளும் போது.

– அன்னை தெரேசா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வேசம் கலைக்கவும் ஓய்வு எடுக்கவும் வேளை நெருங்குதம்மா...

பத்மஸ்ரீ கமலஹாசன் நடித்த **வாழ்வே மாயம்** என்ற திரைப்படம் ஒரு காலத்தில் மக்கள் மத்தியில் பிரபல்யமாகப் பேசப்பட்டது.

அந்தப் படத்தில் வருகின்ற வாழ்வே மாயம் ... வாழ்வே மாயம்... என்ற பாடலில் வருகின்ற **...வேசம் கலைக்கவும் ஓய்வு எடுக்கவும் வேளை நெருங்குதம்மா...** என்ற வரிகளின் அர்த்தம் இதயத்தை நெக்குருக்கும்.

அந்தளவுக்கு அந்தப் பாடல் வரிகள் ஆழ்ந்த அர்த்தம் உடையவை.

இப்பாடல் வரிக்கு முன்னதாக இடம்பெறும் **நாடகம் வரும் நேரம்தான் உச்சக் காட்சி நடக்குதம்மா...** என்ற வரிகள் வெறும் பாடல் வரிகள் அன்று.

ஒவ்வொரு மனிதர்களும் இதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வது தர்ம வழியில் நடப்பதற்கும் நாவடக்கத்திற்கும் அவசியமானது.

மேற்குறிப்பிட்ட இரு வரிகளில் வேசம் கலைக்கவும் ஓய்வு எடுக்கவும் நேரம் நெருங்குதம்மா... என்ற வரியை திறனாய்வுக்கு உட்படுத்தினால்;

இவ்வாறானதொரு சந்தர்ப்பம் இந்தப் பூமியில் பிறந்த அனைவருக்கும் உண்டென்று உணரப்பட்டால்,

இந்த மண்ணில் முசோலினிகளும், ஹிட்லர்களும் உருவாகியிருக்க மாட்டார்கள்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக கண்ணிருந்தும் குருடர்களாக வாழும் கயமைப் பண்பாடு நீடிக்கவே செய்கிறது.

ஐயா! வாழ்வே மாயம்... என்ற பாடல் இப்போது எதற்கானதென்று நீங்கள் கேட்கலாம்.

அவ்வாறானதொரு கேள்விக்கான பதில் ஜெனிவாவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்த பிரேரணை நேற்றைய தினம் நிறைவேறியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் நிறைவேறியமை சாதாரண விடயம் அல்ல.

தீர்மானத்தில் குறிப்பிட்ட விடயங்கள் வலுக்குறைக்கப்பட்டவை எனவும் இத்தீர்மானத்தால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை என்ற விமர்சனங்களும் எழலாம்.

இத்தகையை விமர்சனங்கள் அர்த்தமற்றவை. ஐ.நா. என்ற சர்வதேச அமைதி காக்கும் அமைப்பில் மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் வைத்து இலங்கை அரசின் மீது குற்றச்சாட்டைக் கொண்டு வந்து அதனை நிறைவேற்றுவது என்பது, சர்வதேச அரங்கில் மனித உரிமை மற்றும் ஜனநாயகம் சார்ந்த விடயங்களில் இலங்கையின் பின்னடைவை சுட்டி நிற்கும்.

இத்தகைய தீர்மானம் அடிப்படையானது. அதன் அடிப்படை நோக்கம் இலங்கை அரசு தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

ஆக, ஜெனிவாத் தீர்மானத்தை அரசு சிரத்தையோடு நோக்க வேண்டும். இதைத் தவறவிட்டால் வேசம் கலைக்கவும் ஓய்வு எடுக்கவும் வேளை நெருங்கும்.

# பலரிடம் பண மோசடி குடும்பப் பெண் கைது!

(யாழ்பாணம்)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி பல பேரிடம் பணம் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பைச்சேர்ந்த 48 வயதான பெண்ணொருவர் நேற்று யாழ். பெருங்குற்றத்தை தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். நகரப்பகுதியினுள்ள விடுதியென்றில் தங்கியிருந்த போது, குறித்த பெண்ணை நேற்று முற்பகல் 10 மணியளவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் தொடர்பில் 6 பேர் இதுவரை யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டு விசாரணைகளின் படி சுமார் 15 இலட்சம் ரூபா பணத்தை குறித்த பெண் மோசடி செய்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்

கைது செய்யப்பட்ட பெண் தொடர்பில் பாதிக்கப்பட்ட மேலும் பலர் முறைப்பாடு செய்யக்கூடிய வாய்ப்புள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் பண மோசடிச் சம்பவங்களும், திருட்டுக் கொள்ளைச் சம்பங்களும் அதிகரித்து வருவதுடன், கடன் சுமையினால் பலர் தற்கொலை செய்து உயிரிழப்பதும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# 25 இலட்சம் பண மோசடி சந்தேக நபர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

சுமார் 25 இலட்சம் ரூபா பணம் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவரை யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

யாழ்.கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் அதே இடத்தைச்சேர்ந்த நபர் ஒருவரிடம் கைமாற்றாக பணத்தினை பெற்று ஏமாற்றி மோசடி செய்துள்ளார்.

கைமாற்றாக கொடுத்த பணத்தை மீளப்பெறும் முயற்சி பலனளிக்காத நிலையில் அந்த நபருக்கு எதிராக பாதிக்கப்பட்டவர் யாழ். விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்தார்.

இதனையடுத்து குறித்த நபரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

# துடுப்பாட்ட போட்டி

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பதிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கிடையில் நடைபெறும் ஆண் பெண் இருபாலாருக்குமான 6 பேர் பங்குபற்றும் 5 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்திலும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழக அணிகள் குறித்த நேரத்தில் வருகை தந்துபோட்டி நிரல் தயாரிக்க உதவுமாறு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி தெரிவித்துள்ளார். (அ-5-23)

# முதலீட்டுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

முதலீட்டாளர் தினம் 2013ஐ முன்னிட்டு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையால் நடத்தப்படும் முதலீடு பற்றிய கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், 2013ஆம் ஆண்டு இலங்கையின் நிதிநிலை அறிக்கையில் மூலதனச் சந்தைக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளைத் தொடர்புபடுத்தி யாழ்.பல்கலைக்கழக பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் சந்திரசேகரமும்,

பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளை முகாமையாளர் மு.திலீபனும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இதில் யாழ்ப்பாணத்திலுள்ள 8 இற்கும் மேற்பட்ட பங்குத் தரகு நிறுவனங்களின் முதலீட்டு ஆலோசகர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கவுள்ளனர். (எ)

# ஜனாதிபதி இன்று கிழக்குக்கு விஜயம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்ய உள்ளார். இன்று முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் கிழக்கு மாகாணத்தில் ஜனாதிபதி தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கல்லடிப் பாலம், அம்பாறை விமானப் படை முகாமின் ஓடுபாதை ஆகியவற்றை ஜனாதிபதி அங்குரார்ப்பணம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

23-ம் திகதி ஜனாதிபதி அம்பாறையில் நடைபெறவுள்ள தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை அங்குரார்பணம் செய்து வைப்பார்.

மக்கள் வங்கி பிரதேச கிளை, அரந்தலாவை பிக்குகள் கொலை தொடர்பான அருங்காட்சிகம் மற்றும் பாடசாலை கட்டிடத் திறப்புவிழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். (எ-11)




இறைவனை நம்புபவர்கள் ஆத்திகர் எனப்படுவர். இறைநம்பிக்கை அற்றவர் நாத்திகர் எனப்படுவர். நாத்திகர் இறைவன் புகழைப் பழித்துரைக்கும் இயல்பினர். மணிவாசகர் வாழ்ந்த காலத்திலும் இத்தகைய இயல்பினர் இருந்துள்ளனர். அவர்களை இறைவன் அச்சுறுத்துவான் என மணிவாசகர் ஒரு பாடலிலே பதிவு செய்துள்ளார். மெய்ப்பொருளான இறைவனை அறியாதவரும் இவ்வுலகத்திலே பலர் வாழ்கின்றனர். இறைவன் மெய்யர்க்கு மட்டுமே மெய்ப்பொருளாகத் தோன்றுபவன். மணிவாசகர் இறைவனைப் பொருளே என விளிக்கிறார். பொருள் என்றால் மெய்ப்பொருளையே குறிக்குமென உரையாசிரியர் பரிமேலழகர் திருக்குறளுக்கு எழுதிய உரையிலே குறிப்பிட்டுள்ளார். இறைவன் மெய்யடியார்க்கு மெய்ப்பொருளாயுள்ளதையே மணிவாசகர் பாடலில் விளக்கியுள்ளார்.

எமக்குப் புகலிடம் ஒன்று இல்லாத நிலையில் இறைவனே எமக்குப் புகலிடமாவான். எம்மைப் பற்றி யாருமே கவலைப்படாதபோது எமது கவலைகள் இறைவனிடம் கூற மனஆறுதல் பெறலாம். கேட்பதற்கு ஒருவர் இருக்கிறார் என்பதே புதியதொரு மனப்பலத்தைத் தரும். மெய்யடியார்கள் விழுங்குகின்ற அருளமுதம் என இறைவனை மணிவாசகர் காட்டுகிறார். அந்த அருளமுதத்தை அவர்கள் உண்பதனால்தான் துன்பமில்லாமலிருக்கிறார்கள்.

திருவுத்தரகோசமங்கை என்னும் திருத்தலத்திலே சிவன் அரசனாக வீற்றிருக்கிறான். அந்த அரசனைப் பற்றி மணிவாசகர் பாடும்போது பல்வேறு சிறப்புக்களை எடுத்துரைத்துள்ளார். உத்தரகோச மங்கையின் சூழல் அணி பொழில் நிறைந்ததாக உள்ளது.

இயற்கையான மரங்கள் நிறைந்த அழகான ஒரு சோலை. அங்கே இருள் போல இறைவன் இருக்கிறான். உலகியல் உணர்வாலே உணரப்பட முடியாதவருக்கு மறைந்திருக்கிறான். ஆனால் மெய்யுணர்வால் உண்ரப்படும் போது வெளிப்பட்டுத் தோன்றும் இயல்புடையவன்.

இந்த உலகத்திலே உள்ள உயிர்களுக்கும் இகபரம் ஆனவன் இறைவன் என மணிவாசகர் கூறுகிறார். இகம் என்பது எடுத்த பிறப்பாகிய இம்மைப் பயனையும் இப்பிறப்பில் செய்த வினைப் பயனால் வரும் மறுமைப் பயனையும் உணர்த்தியது. பரம் என்பது இம்மை மறுமை அல்லாத வீடுபேறாகிய பயனை உணர்த்தியது. அப்படியிருக் கின்ற இறைவனே என்னை நீ கைவிட்டு விடலாகாது.

மணிவாசகர் கற்ற கல்வியாலும் இறைவனுடைய சிறப்பான பெருமைகளை அறிந்தவர். எனினும் தன்னுடைய பக்திநிலை தாழ்ந்தது என்பதை அவர் நினைவிற் கொண்டுள்ளார். மெய்யடியானாகத் தன்னை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மெய்யடியார் என அவர் குறிப்பிடும் அடியார்களுக்கும் தனக்கும ஒரு வேறுபாட்டை அவர் நன்கு உணர்ந்திருந்தார். மெய்யடியார்கள் இறைவனைத் தொடர்ச்சியாக வழிபட்டு இடையறாத இறை சிந்தனையோடு வாழ்பவர்கள் இறையருளை விழுங்கி வாழ்வு நடத்துபவர் என்பதே மணிவாசகர் கருத்து. அருளை விழுங்குதல் என்பது அவர் உலகியல் நிலையில் நின்று கூறும் செய்தியாகும். இறைவன் அருள் என்பது நாம் தேடிச்செல்லும் ஒன்றல்ல. அவனருள் அவனால்தான்


**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

கிடைக்க வேண்டும். உலகியல் தேவைகள் யாவும் இறையருளால் நிறைவேறுகின்றன என்ற நம்பிக்கை வழிபாட்டின் அடிப்படையாகும். இந்த அடிப்படையான உண்மையையே மணிவாசகர் விழுங்குதல் என்று குறிப்பிட்டுள்ளார். இது அவர் செயற்படுத்தாத ஒரு வழிபாட்டு நடைமுறையாகும்.

**பொருளே தமியேன் புகலிட மேநின்**
**புகழ் இகழ்வார்**
**வெருளே எனைவிட் டிடுதி கண்டாய்**
**மெய்மை யார் விழுங்கும்**
**அருளே யணிபொழில் உத்தர**
**கோச மங்கைக் கரசே**
**இருளே வெளியே யிகபர**
**மாகி இருந்தவனே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லியுடன் சச்சின் ஓய்வு?



டில்லி டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து சச்சின் விடைபெறுவார் என கூறப்படுகிறது.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் (வயது- 39) இதுவரை, 463 ஒருநாள் போட்டிகளில் 18,426 ஓட்டங்கள் (49 சதம், 96 அரைசதம்), 197 டெஸ்டில் 15,804 ஓட்டங்கள் (51 சதம், 67 அரைசதம்) எடுத்துள்ளார். சர்வதேச போட்டிகளில் 100 சதம் அடித்துள்ளார்.

கடந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இவர் தேர்வு செய்யப்படாமல் போக, திடீரென ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்து அதிர்ச்சி ஏற்படுத்தினார். விரைவில் 40 வயதை பூர்த்தி செய்யவுள்ள சச்சின், சமீபகாலமாக டெஸ்ட் போட்டிகளில் தடுமாறுகிறார்.

கடந்த 2011, ஜனவரியில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்டில் சதம் அடித்த பின், இதுவரை பங்கேற்ற 20 டெஸ்டில் ஒரு சதம் கூட அடிக்கவில்லை. கடைசியாக களமிறங்கிய 10 இன்னிங்சில் (8, 8, 76, 5, 2, 81, 13, 7, 37, 21) இரு முறை அரைசதம் கடந்தார்.

ஒவ்வொரு தொடரில் பங்கேற்பது குறித்தும், யோசித்து தான் முடிவு செய்கிறேன். எனது உடல் ஒத்துழைக்கும் வரை கிரிக்கெட் போட்டியில் தொடர்வேன், " என, சச்சின் சமீபத்தில் தெரிவித்தார். ஆனால், மொகாலி டெஸ்டின் இரண்டாவது இன்னிங்சில் ரன் அவுட்டாகி ஏமாற்றம் அளித்தார். தவிர, முரளி விஜய், தவான், புஜாரா, விராத் கோஹ்லி, ஜடேஜா என, அடுத்த தலைமுறை தயாராகி விட்டதால், சச்சினுக்கு இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், டில்லி போட்டி தான் சச்சின் சொந்த மண்ணில் பங்கேற்கும் கடைசி டெஸ்ட் போட்டியாக இருக்கும் என்று தெரிகிறது. இப்போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து முழுமையாக விடை பெறுவார் என்று நம்பப்படுகிறது.

# 10 ஆண்டுகளுக்கு முன் குளிர்பானத்தின் மூலம்தான் சச்சினை முதலில் சந்தித்தேன்

## நூல் வெளியீட்டு விழாவில் தோனி



இந்த நூற்றாண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் தெண்டுல்கர்' என்ற பெயரில் சச்சின் தெண்டுல்கர் பற்றிய நூல் வெளியீட்டு விழா டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் இந்திய அணித் தலைவர் தோனி கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்து அங்கு உரையாற்றும்போது,

விளையாட்டு உலகில் எனது ஹீரோ டெண்டுல்கர் தான். கிரிக்கெட்டுக்கு வெளியே அவரது புகழ் காரணமாக, அவரிடம் பேசுவதற்கு எனக்கு இன்னும் கூட தயக்கம் இருக்கிறது. ஆனால் கிரிக்கெட் களம் என்று வரும் போது, எப்போதும் அணியின் யுக்திக்கு ஏற்றாற போல் நான் நேர்மையாக நடந்துகொள்வேன். அணியின் வியூகங்கள் பற்றி ஆட்டத்தின்போது நானும், டெண்டுல்கரும் விவாதிப்பது வழக்கம். இதில் அவர் சமாதானப்படுத்தினால் கூட, சில சமயம் அவரது முடிவை நான் ஏற்றுக்கொள்ளாமல் போனது உண்டு. இது அடிக்கடி நடந்து இருக்கிறது. எனது பெயரை அணித் தலைவராக அவர் பரிந் துரை செய்ததை (2007ஆம் ஆண்டு), எனது நேர்மைக்கு கிடைத்த பிரதிபலமாக நினைக் கிறேன். அவர் என்னை பற்றி என்ன நினைக்கலாம் என்றால், வித்தியாசமான சூழ்நிலைகளிலும், அணியின் யுக்தியை வகுப்பதிலும் நான் மிக விரைவாக கற்றுக் கொண்டு இருக்கி றேன் என்பதைத் தான். நான் தலைமைப் பொறுப்பு வராவிட்டாலும்கூட, அவர் எனது பெயரை பரிந்துரை செய்ததையே பெரிய கௌரவமாக கருதியிருப்பேன்.

டெண்டுல்கரை முதல் முறையாக 10 ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்தேன். 2001-02ஆம் ஆண்டு துலீப் கிண்ணக் கிரிக்கெட் புனேயில் நடைபெற்றது. நான் கிழக்கு மண்டல அணியில் இடம்பெற்றிருந்தேன். அந்த ஆட்டத்தின்போது, நான் வீரர்களுக்கு குளிர்பானம் எடுத்து சென்று வந்தேன். இந்த போட்டியில் டெண்டுல்கர் 199 ஓட்டங்கள் எடுத்தார். அவர் துடுப்பாட்டத்தில் இருந்தபோது நான் எனது அணியின் சக வீரர்களுக்கு குளிர்பானம், தண்ணீர் போத்தல்களை எடுத்து சென்றேன். அப்போது டெண்டுல்கர் திடீரென என்னை பார்த்து, 'எனக்கும் கிடைக்குமா'? என்று என்னிடம் கேட்டார். அதுதான் எனது ஹீரோவான டெண்டுல்கரை நான் முதல் முறையாக சந்தித்தது. அவர் கேட்டதும் எனக்கு எந்த வார்த்தையும் வரவில்லை. முடிவில் அவருக்கு ஒரு குளிர்பானத்தை வழங்கினேன் இவ்வாறு கூறினார் தோனி.




## ரூபாயிலிருந்து...

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர், ஒரு ரி-20 போட்டி ஆகியவற்றிற்கான நுழைவுச்சீட்டுகளின் விற்பனைகளின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

"அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறவுள்ள முதலிரண்டு போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டுக்கள் 20 ரூபா, 50 ரூபா, 150 ரூபா, 200 ரூபா ஆகிய பெறுமதிகளில் கிடைக்கப் பெறுகின்றன.

இப்போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டுக்களை பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம், கண்டி அபான் சிற்றி நிலையம் ஆகியவற்றில் எதிர்வரும் இன்று முதல் காலை 08.30 தொடகம் மாலை 5 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும். இவை தவிர, அனைத்துப் போட்டிகளுக்குமான நுழைவுச்சீட்டுக்களையும் இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைமை அலுவலகத்தில் காலை 9 மணி முதல் மாலை 5.30 வரை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

# தீவுகள் ஆதிக்கம்

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் மேற்கிந்தியத் தீவுகளின் துல்லியமான பந்துவீச்சால் சிம்பாவே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுள்ளது. முதல்நாள் ஆட்ட நேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முழுமையான ஆதிக்கத்தைப் பெற்றுள்ளது.

டொமினிக்காவில் இடம்பெறும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே முதலாவது விக்கெட்டுக்காக 42 ஓட்டங்கள் பகிரப்பட்டபோதிலும், அதன் பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பாக அணித்தலைவர் பிரெண்டன் டெய்லர் 33 ஓட்டங்களையும் வியூசி சிபன்டா 32 ஓட்டங்களையும் சியன் வில்லியம்ஸ் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷேன் ஷிலிங்பேர்ட் 5 விக்கெட்டுக்களையும், மார்லன் சாமுவேல்ஸ் 3 விக்கெட்டுக்களையும், ஷனொன் கப்றியல் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதல்நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அவ்வணி 2 விக்கெட்டுக்களை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியிருந்த போதிலும், 3ஆவது விக்கெட்டுக்காக கிறிஸ் கெயில், மார்லன் சாமுவேல்ஸ் இருவரும் பிரிக்கப்படாத 79 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தனர்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கிறிஸ் கெயில் ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும், மார்லன் சாமுவேல்ஸ் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும், கெரன் பவல் 24 ஓட்டங்களையும் பெற்றனர். வீழ்த்தப்பட்ட இரண்டு விக்கெட்டுக்களையும் கைல் ஜார்விஸ் வீழ்த்தியிருந்தார்.



# 10 மாத சம்பள நிலுவை தராவிட்டால்....

# ஐ.பி.எல். போட்டிகளை முடக்குவோம்;

## கிங்பிஷர் எயர்லைன்ஸ் பணியாளர்கள் எச்சரிக்கை!

பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ் கிரிக்கெட் அணியினை வழிநடத்தி வரும் கர்நாடகாவின் பெரும் தொழிலதிபர் விஜய் மல்லையாவின் தொழில் முகங்களில் ஒன்று கிங்பிஷர் எயர் லைன்ஸ். ஆனால் இதில் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினைகளால் ஆட்குறைப்பு செய்யப்பட்டிருக்கும் ஊழியர்களுக்கும் பத்து மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை.

இந்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளுக்காக ரோயல் சலஞ்சேர்ஸ் அணிக்காக வெளிநாட்டு வீரர்களை அதிகப்படியான ஏலத்தொகையல வாங்கியுள்ளார் விஜய் மல்லையா.

இந்நிலையில் தங்களுக்கு சம்பள நிலுவை கொடுபடாமல் வீரர்களை கொள்வனவு செய்ததால் வெறுப்படைந்த எயர்லைன்ஸ் ஊழியர்கள், விஜய் மல்லையா மீது நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் முறையிட்டுள்ளனர். பணத்தைத் தராவிட்டால், மல்லையாவின் அணி பங்குபெறும் ஐ.பி.எல் போட்டிகளை நடத்த விடமாட்டோம் என்று கூறுகின்றனர்.

பார்முலா 1 என்ற பிரபலமான கார பந்தயத்தை மல்லையா இந்தியாவில் நடத்தியபோது, இதேபோல் அச்சுறுத்தியதால் தங்களுக்கு ஒரு மாத சம்பளம் வந்தது. மேலும் மீதித் தொகை தவணைகளில் செலுத்தப்படும் என்ற உறுதிமொழியும் அளிக்கப்பட்டது. ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை. அதனால் ரோயல சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி விளையாடும் இடங்களில் நாங்கள் மறியல் செய்வோம் என்று பணியாளர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த அணியின் வீரர்களையும் போட்டிகளில் பங்கு கொள்ள வேண்டாமென்றும் கிங்பிஷர் எயர் லைன்ஸ் பணியாளர்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன் மல்லையாவின் அணி தடைசெய்யப்படவேண்டும் என்று கிரிக்கெட் சபையிடமும் இந்திய அரசிடமும் கோரிக்கையை முன் வைத்துள்ளனர். இதுபோல் பணியாளர்களுக்கு பிரச்சினைகள் வராமல் தடுக்க தொழில் நிறுவனங்களின் மீது கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டுவரவேண்டும் என்றும் இந்தப்பிரச்சினையை விரைவில் தீர்க்கக்கோரியும் இந்திய ஜனாதிபதி, பிரதமர், தலைமை நீதிபதி, சோனியா காந்தி, விமானத்துறை அமைச்சர் அஜித் சிங் மற்றும் நிர்வாக இயக்குநர் அருண் மிஸ்ரா ஆகிய அனைவருக்கும் கடிதம் எழுதியுள்ளனர் கிங்பிஷர் எயர் லைன்ஸ பணியாளர்கள்.

**'பணியாற்றும் பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்க பணம் இல்லை. ஆனால் ஐ.பி.எல். போட்டியில் ரோயல் சலஞ்சேர்ஸ் அணிக்காக வீரர்களைக் கோடிக் கணக்கில் கொட்டி வாங்குவதற்கு மட்டும் பணம் இருக்கிறதா...?**

*இது பணியாளர்களின் கொந்தளிப்பு*




## தொழிலதிபர்



பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ், கிங்பிஷர் எயர்லைன்ஸ் உட்பட பல நிறுவனங்களின் உரிமையாளரான விஜய் மல்லையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவை வென்றது பாகிஸ்தான்



தென்னாபிரிக்கா அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான 4வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் ஏ.பி.டி வில்லியர்ஸ் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி முதல் 10 ஓவர்களில் 38 ஓட்டத்திற்கு 4 விக்கெட்டினை இழந்து தடுமாறியது.

பின்னர் ஜோடி சேர்ந்த அணித்தலைவர் டி வில்லியர்சும், மில்லரும் அணியை மீட்டு எடுத்தனர்.

அவ்வணி நிர்ணயிக்கப்பட 50 ஓவர்களில் 9விக்கெட் இழப்பிற்கு 234 ஓட்டத்தினை பெற்றது.

அதிக பட்சமாக டி வில்லியர்ஸ் 75 ஓட்டத்தினையும், மில்லர் 67 ஓட்டத்தினையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மொகமட் இர்பான், யூனைக் கான் , சயிட் அஜ்மல் ஆகியோர் தலா 3 விக்கெட்டினை கைப்பற்றினர்.

235 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி அவ் இலக்கினை 48.4 ஓவர்களில் மிஸ்பா உல் ஹக்,இம்ரான் பர்ஹத்துடன் அடைந்தது.

அதிகபட்சமாக இம்ரான் பர்ஹத் 93 ஓட்டத்தினையும், மிஸ்பா உல் ஹக் 80 ஓட்டத்தினையும், பெற்றனர்.

பந்துவீச்சில் பீற்றர்சன் 2 விக்கெட்டினைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவு செய்யப்பட்டார்.

நடைபெற்ற போட்டிகளில் படி பாகிஸ்தான் 2 போட்டியிலும், தென்னாபிரிக்கா 2 போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இராணுவப் பயிற்சியை முடித்த தமிழ் யுவதிகள் வெளியேறினர்



இலங்கை இராணுவத்தில், எதிர்ப்புக்களுக்கு மத்தியில் முதன் முறையாக இணைத்துக்கொள்ளப்பட்ட 95 தமிழ் யுவதிகள் தமது இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட இராணுவ தலைமையகத்தில் இடம் பெற்ற பயிற்சி நிறைவு தின வைபவத்தில், இராணுவத்தின் மூத்த தமிழ் அதிகாரியான பிரிகேடியர் ஆர்.ரட்ணசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

தமிழ் பெண் இராணுவத்தினரின் இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்ட பின்னர் அங்கு உரையாற்றிய பிரிகேடியர் ரட்ணசிங்கம்,

இதே போன்று மேலும் தமிழ்ப் பெண்களை இராணுவத்தில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ள தமிழ்ப் பெண்கள் இராணுவத்தின் நிர்வாகச் செயற்பாடுகளில் கணணி இயக்குநர்கள் , எழுதுவினைஞர்கள் மற்றும் தாதியர் உதவியாளர்கள் போன்ற பணிகளில் அமர்த்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

தமது பிள்ளைகள் இராணுவத்தில் இணைந்து தொழில் வாய்ப்பைப் பெற்றிருப்பது குறித்து, இந்த வைபவத்தில் கலந்து கொண்டிருந்த பெற்றோர்கள் சிலர் திருப்தியும் மகிழ்ச்சியும் வெளியிட்டுள்ளனர்.

கடந்தவருடம் நவம்பர் மாதம் இந்தப் பெண்கள் இராணுவத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட போது பல தரப்பினரும் கடுமையாக எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

த. தே.கூட்டமைப்பினரும் தமது கண்டத்தை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஏ-11)

# அமெ.பிரே...

பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தியிருப்பது போன்றவற்றை இலங்கை அரசு முன்னெடுத்திருப்பதனை நாம் அங்கீகரித்து வரவேற்கிறோம் என்னும் பந்தி முதல் வரைவில் இல்லை. புதிதாக வெளியான நான்காவது வரைவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. (ஏ-11)

# சுதந்திரமான விசார...

உரிமைகள் ஆணையத்தில் அளித்த உறுதிகளை நிறைவேற்றுவதில் போதுமான முன்னேற்றத்தை இலங்கை வெளிப்படுத்தவில்லை என்பதை கவலையுடன் சுட்டிக் காட்டுகிறோம்.

13-வது அரசியல் சாசனத் திருத்தத்தின் மூலமாக அரசியல் அதிகாரத்தை வழங்குவது உள்ளிட்ட நடவடிக்கைகளை இலங்கை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்தது என்பது தமிழர்கள் உட்பட அனைத்து இலங்கை சமூகத்தினரும் ஏற்கக்கூடிய ஒரு அரசியல் தீர்வுக்கான நல்வாய்ப்பாக இந்தியா கருதுகிறது.

அதி உயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைத்தல், வட மாகாணத்தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட தனியார் நிலங்களை ஒப்படைத்தல், காணாமல்போதல், கடத்தப்படுத்தல் போன்றவற்றைக் குறைத்தல் என்பது உள்ளிட்ட எல்.எல்.ஆர். சியின் யின் பரிந்துரைகளை முழுமையாக உரிய காலத்துக்குள் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும்.

**சுதந்திரமான விசாரணை:** பொதுமக்களின் உயிரிழப்புக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுதந்திரமான, நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இதற்கு பொறுப்பேற்க இலங்கை முன்வரவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இத்தகைய நடவடிக்கைதான் அனைத்துலக சமூகத்தை திருப்திபடுத்தும் எனவும் எதிர்பார்க்கிறோம். இலங்கையின் அண்டை நாடு என்கிற வகையில் அந் நாட்டின் மறுசீரமைப்பு, மீள் குடியமர்த்தல் உள்ளிட்டவற்றில் இந்தியாவும் பங்களிப்பு செய்து வருகிறது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்தோரை மீள் குடியமர்த்தவும் அங்கு வளர்ச்சிப் பணிகளை, உள் கட்டமைப்புகளை மேற்கொள்வதில் இந்தியா ஈடுபட்டுவருகிறது. இலங்கையின் வட மாகாணத்தில் வரும் செப்டம்பர் மாதம் தேர்தலை நடத்துவதாக இலங்கை அறிவித்திருக்கிறது.

வட மாகாண மக்கள் தங்களது ஜனநாயகக் கடமையை சுதந்திரமாக செயல்படுத்த வேண்டும். ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணையரை இலங்கை அரசு அழைத்திருக்கிறது. இந்த அழைப்பை ஏற்று அவர் விரைவில் அங்கு செல்ல வேண்டும்.

இலங்கையில் அனைத்து சமூகத்தினரும் கண்ணியத்துடனும் சம உரிமையுடன் உரிய சட்டப் பாதுகாப்புடன் வாழ்வதற்கான அரசியல் தீர்வு மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை விரைவாக இலங்கை செயல்படுத்துவதற்கு இந்தியா ஊக்கமளிக்கும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இலங்கையுடன் உறவு கொண்டிருக்கும் இந்தியாவானது, அந்நாட்டில் நடைபெறக் கூடிய நிகழ்வுளைக் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது என்றார். (ஏ-11)


# யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி பொன் விழாவுக்கு வட மாகாண ஆளுநரின் ஆசிச் செய்தி







## Message from Hon. Governor, Northern Province



Congratulations to the Manipay Ladies' College, Jaffna who are celebrating their Golden Jubilee on 16th March 2013. A Golden Jubilee is an important mile stone, especially because fifty years have passed and golden memories will linger.

Prior to the year 1963 the Manipay Hindu College had girls and boys in its roll and its Principal had been Mr.Muthuvelpillai. The Old Boys' Association had got together, organized a Carnival and with the proceeds 13 perches of land had been bought. On this land a building had been constructed and the Manipay Ladies' College started functioning as a separate entity. Mrs.M.Paramasamy had been the senior Teacher in Charge then.

In 1963, the Government took over the school and its Principal then had been Miss. P.Arumugam. There had been over 600 girls on roll. A point worthy of mention is that the present Principal had been one of the 600 students on roll.

Presently, Manipay Ladies' College has shown exemplary results, both in the field of education as well as extra - curricular activities in the Northern Province.

Best Wishes to the Principal, Staff, Students and the Magazine Committee.

May the Manipay Ladies' College prosper and show better results in the future too!!!

**Hon. G.A.Chandrasiri**
**Governor**
**Northern Province.**

(C-2220)

எமது கல்லூரியின்
பொன்விழா கட்டிடத் திறப்பு
விழாவில் நேர்து வருகை தந்த
கௌரவ பாரம்பரிய
கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா
அவர்களும், கௌரவ ஆளுநர்
ஜி.ஏ. சந்திரசிறி அவர்களும்
எமது வேண்டுகோளை ஏற்று
எமக்கு இரண்டு மாடிக்
கட்டிடத்தை நிர்மாணித்து
தருவதாக உறுதியளித்துள்ளமை
எமக்கு மகிழ்ச்சியளித்துள்ளது.
அவர்கள் இருவருக்கும் எமது
பாடசாலை சமூகம் சார்பாக
நன்றியறிதலையும்,
பாராட்டுதலையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

-பாடசாலைச் சமூகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்மானம் நிறைவேற்றம் கூட்டமைப்பு வரவேற்பு

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை வரவேற்பதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார். தீர்மானத்தில் இறுதி நாட்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன ஆனால் சென்ற முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒத்தே இத் தீர்மானம் அமைகிறது என அவர் கூறினர்.

அவர் மேலும் கூறுகையில், தீர்மானத்தின் முக்கியமான அம்சம் என்னவென்றால் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் பேரவைக்கு சமர்ப்பித்த அறிக்கை கவனத்திற்கு எடுக்கப்பட்டு அவர்களின் அறிக்கை கவனிக்கப்படவேண்டும் என்ற கருத்தில் தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விடயத்தை நாங்கள் ஏற்றுகொள்ள வேண்டும். அது சம்பந்தமான எங்களது மகிழ்ச்சியை தெரிவிக்கவேண்டும். (எ-11)

## இலங்கை...

நிறுவனத்தினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இரு நாடுகள் கூட்டாக இணைந்து யுத்தம் நடத்திய போது பாரியளவில் பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தால் அது தொடர்பில் விசாரணை நடத்தும் உரிமையும் அதிகாரமும் மத்திய புலனாய்வுப் பிரிவிற்கு காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட சுயாதீன நிபுணர் அறிக்கையில் இலங்கை யுத்தத்தில் பாரியளவு பொது மக்கள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-11)

## ஆதரவா...

உகண்டா, ஐக்கிய அரபு எமிரேட்ஷ், தாய்லாந்து, வெனிசுலா, பிலிப்பைன்ஸ்குவைத், மவுரிடானியா ஆகிய நாடுகளும் வாக்களித்தன.

ஒரு நாடு நேற்றைய கூட்டத் தொடரில் கலந்து கொள்ளவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஜெனிவா தீர்...

மான விசாரணை தேவை என்று கூறியிருந்தார். இத்தீர்மானத்தை ஏற்க முடியாது என்று இலங்கையின் பிரதிநிதியான அமைச்சர் சமரசிங்க அறிவித்திருந்தார்.

தமது நாட்டின் விவகாரத்தில் வெளிநாடுகள் தலையிடுவதை விரும்பு வதில்லை எனக் கூறினார். பின்னர் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்பில் அமெரிக்காவின் தீர்மானத்திற்கு இந்தியா உட்பட 25 நாடுகள் ஆதரவு தெரிவித்திருந்தன. 13 நாடுகள் எதிராக வாக்களித்தன. 8 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்தன. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக 2-வது முறையாக தீர்மானம் கொண்டு வரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இராணுவ நீதி...

பேரவையின் கருத்தாக உள்ளது என அவர் கூறினார்.

இதேவேளை மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கையில் நடைபெற்ற மனித உரிமைகள் மீறல்கள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள இறுதிப் பிரேரணையில் பெரும்பாலான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும் இலங்கைக்கு எதிரான பிரேரணையில் சர்வதேச விசாரணை என்ற விடயம் அகற்றப்பட்டுள்ளது என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. (எ-11)



A/L பொருளியல் நூல்
பல்தேர்வு வினாவிடை
MCQ
வே.கருணாகரன்
ரூபாய் 70
(2217)
பூபாலசிங்கம் புத்தகசாலை, அன்னை புத்தகசாலை

வேலைவாய்ப்பு
• உழவு இயந்திர இயக்குநர்
செல்லுபடியாகும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
• A/C தொழில்நுட்பவியலாளர்
Split மற்றும் Auto A/C களை பராமரிப்பு மற்றும் திருத்தம் செய்வதில் முன்னனுபவம் உள்ளவர்கள்.
மேற்குறிப்பிட்ட தகைமையுடையவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் அமைந்திருக்கும் எமது அலுவலகத்திற்கு நேரில் வரவும்.
ETM
கரந்தன் வீதி, ஊரெழு.
தொ.பே. இல :- 021 321 5377
(சி-2758)

மென்பனி தூவும் கனடா தேசத்தில் < படிக்க / உழைக்க
வழிகாட்டும் விசேட கருத்தரங்கு
அடிப்படைத் தகுதியுள்ளவர்கள் தேர்வு செய்யப்பட்டு வழிகாட்டுதலிற்குட்படுவர்.
இடம்: திசைகாட்டி குழுமத் தலைமைக் காரியாலயம், கேட்போர்கூடம்.
காலம்: 24.03.2013(ஞாயிறு) மு.ப.10 மணி.
பிரவேசம் இலவசம்- தொலைபேசி மூலம் முற்பதிவு அவசியம்.
(சி-2759)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
021 221 9016, 021 568 9090

5 கற்கைநெறிகளை
கற்கைநெறிக்கட்டணம் இன்றி கற்கலாம்
Hardware & Networking, DTP, Web Design
Sinhalam, Internet & email
Qualified Lectures panel, 12 Years Experience
கல்வியங்காட்டில் மட்டும்
மேலதிக விபரங்களுக்கு நேரில்
243,Adiyapatham Road
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society


## நீங்கா நினைவில் ஆறு ஆண்டுகள்



பிறப்பு
07
03
1980

இறப்பு
22
03
2007

**அமரர் பேரின்பநாதன் தயானந்தன் (நந்தன்)**
(1ம் வட்டாரம் மண்டைதீவு)

வெள்ளை உள்ளம் கொண்டவனே
உன் ஆசைக் கனவுகள் எத்தனை
என்றும் சிரிக்கும் உன் முகம்
இன்னும் எம்முன் நிற்கிறது
அதற்குள் கடந்தது ஆறு ஆண்டுகள்
ஆயினும் உன் நினைவு சுமந்து
உறவுகள் நாம் ஈரவிழிகளுடன்

1ம் வட்டாரம்
மண்டைதீவு (2221) குடும்பத்தினர், அத்தைமார்

**விழிசிட்டி ஞானவைரவ (புளியடி வைரவர்) ஆலய முதலாவது மணவாளக்கோல தினம் (கும்பாபிஷேக தினம்)**

காலம் :- 29.03.2013 (வெள்ளிக்கிழமை)
நேரம் :- காலை 8 மணி

அன்றைய தினம் 108 கலச சங்காபிஷேகத்துடன் வசந்த மண்டப பூசையும், திருவீதியுலாவும் இடம்பெற்று தொடர்ந்து அடியார்களுக்கான மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

மேற்படி உபயம் பொது உபயம் என்பதால் வைரவப் பெருமான் அடியார்களிடம் தேவையான நிதி உதவியினையும் பொருள் உதவியினையும் மனம் உவந்து வழங்குமாறு கேட்டுக் கொள் கின்றோம்.

அதனைத் தொடர்ந்து ஆலய பொதுச்சபையின் வருடாந்த பொதுக் கூட்டமும் நடைபெறும்.

விழிசிட்டி,
தெல்லிப்பழை (2214) நிர்வாக சபையினர்


SALE
குழந்தைகளுக்கான ஆடைகள், விளையாட்டுப் பொருட்களுக்கு
5% -10% Discount
புதுவருடத்தை முன்னிட்டு
மலிவு விலையில்...
குழந்தைகளுக்கான ஆடைகள்,
விளையாட்டுப் பொருட்கள், கல்வி
உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள்,
பொழுதுபோக்கு சாதனங்கள்,
அனைத்தையும் ஒரே கூரையின்
கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
ABI Baby Mart
கலட்டிச் சந்தி அருகாமை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0750519482
& Show Room
OH, BaBY! FuN ToYS!


Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்
- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-2755)
WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org